





# ஞானச்சுடர்

## ஐப்பசி மலர் 2000




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# குறள் வழி

"அருளொடும் அன்பொடும் வாராப்
புல்லார் புரள விடல்" [பொருளாக்கம்

பொருள் :

அருளொடும் அன்பொடும் பொருந்தி வராத பொருளின் ஆக்கத்தை அனுபவித்து மகிழாது நீக்கி விடுதல் வேண்டும்.



உ
குருவே துணை

# நற்சிந்தனை

## எங்கள் குருநாதன்

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்குவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன் [10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 34

2000 ஐப்பசி

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1) | ஸ்ரீ முருக மந்திரம் | 1 - 4 |
| 2) | இதுதான் இந்துமதம் | 5 - 8 |
| 3) | செல்வச்சந்நிதி முருகப்பெருமான் | 9 - 10 |
| 4) | குறளமுதம் | 11 - 13 |
| 5) | சைவசமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள் | 14 - 17 |
| 6) | ரமண மகரிஷிகளின் அன்புக்குரிய லக்ஷ்மி | 18 - 20 |
| 7) | இந்தக் கந்தபுராணப்புகழ் எந்தப் ...... | 21 - 24 |
| 8) | பயனற்ற பேச்சுப் பலன் தராது | 25 - 26 |
| 9) | இறையுணர்வின் இன்ப ரகசியங்கள் | 27 - 29 |
| 10) | மானுடத்தை மேன்மைப்படுத்தும் ..... | 30 - 33 |
| 11) | சந்நிதியான் | 34 - 37 |
| 12) | நலங்காக்கும் நல்ல தமிழ்க்கடவுள்<br>மாணவர் பக்கம் | 38 - 41 |
| 13) | விஜய நகர காலத்தில் முருக வழிபாடு | 42 - 43 |
| 14) | Easy Way to Learn English ( Part 29 ) | - 44 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருட சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்

அச்சுப் பதிப்பு : அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஞானச்சுடர்"
# புரட்டாதி மாத வெளியீடு

வெளியீட்டுரை :

ஆவணி மாதத்திற்குரிய வெளியீட்டுரையைச் சமாதான நீதிவானும் கிராமசேவையாளருமாகிய திரு. அ. கு. க. கிருஷ்ணராசா அவர்கள் மேற்கொண்டார்கள். இவர் தமது ஆரம்ப உரையில் இது போன்ற ஒரு ஆத்மீக சஞ்சிகையைத் தொடர்ச்சியாக வெளியிடுவதென்பது மிகவும் கஷ்டமான காரியம் என்று குறிப்பிட்டு அவ்வாறு தொடர்ச்சியாக வெளியீடு இடம் பெறுமானால் அதில் வியாபார நோக்கம் முக்கியமானதாக இடம் பெற்றிருக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.

ஆனால் ஞானச்சுடர் அவ்வாறான வியாபார நோக்கமோ, விளம்பரமோ இல்லாது அதே நேரம் தனக்கெனப் பரந்த ரீதியாக ஆழமான ஒரு சமய அமைப்பையும் கொண்டிராது தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருப்பது எம்மைவியப்பில் ஆழ்த்துகின்றது எனக்குறிப்பிட்டார்கள்.

மேலும் தத்துவக்கருத்துக்களை வழங்குகின்ற அதே வேளை எளிய நடையில் வெளிவருவதும் இதன் சிறப்பு அம்சமாகுமெனவும் எடுத்துக் காட்டினார்கள்.

மதிப்பீட்டுரை :

மலருக்கான மதிப்பீட்டுரையைக் காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்கள் நிகழ்த்தினார்கள். ஓய்வு பெற்ற ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபராகவும் பன்துறை ஆற்றல் மிக்கவருமான சுந்தரம்பிள்ளை அவர்கள் ஆத்மீகம் சார்ந்த சில கருத்துக்களையும், அதே நேரம் எமது சமகாலச் சமுதாயம் சார்ந்த கருத்துக்களையும் தமது ஆரம்ப உரையில் அடியார்களுக்கு எடுத்து விளக்கினார்கள்.

மலரில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் பற்றிப் பொதுவாகத் தனது அபிப்பிராயத்தை வெளியிட்ட காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் புரட்டாதி மாத மலரில் இடம் பெற்ற சில கட்டுரைகளின் சிறப்பு இயல்புகளையும் அவற்றின் ஆழமான கருத்துக்களையும் சபையினருக்கு எடுத்துக் காட்டினார்கள்.

மாணவர் பக்கத்தில் இடம் பெற்றுள்ள சிறிய கட்டுரை ஆங்கில அறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் ஒழுக்கத்திற்கு வழங்கியிருக்கும் முக்கியத்துவத்தின் சிறப்பை எடுத்துக் காட்டி மலரின் தரத்தை மதிப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# திருமலி செல்வச் சந்நிதி

காவியர் திலகன்செய் தொல்பழை நவியக் கைதொழு தேத்தும்
மாசில வருள்பெறச் சுக்கிலை வாட்டி வாளாளல் வைத்த
ஈசனார் மைந்தர் இனிதுமர் தொண்டைமா னாற்றில் நகரும்
தேசொளி மிகும் செல்வச் சந்நிதிசேர் வினையான சேராவே.

பொன்னிரு பாகர் பெருஞ்சேவலங் கொடியினர் பிரிவிலா துறைவர்
வன்மையா மயில்மேல் முருகுபாவர் வருமடியார் வினைகளை வேலினர்
விண்முகில் பணிய மேவுபர் மாடநிரைத் தொண்டைமானா றமரும்
அண்ணலார் செல்வச் சந்நிதி அணுக ஆரருள் அணுகும்மே.

முந்தொரு நான்று முக்கண்ணவர் கேட்ப மூவிரு முகத்தவர்
சந்தமறை முன்மொழி குடிலைப் பொருளுரை சாற்றிய சதுரர்
வந்துமர் வளநகர் தொண்டைமா னாறு வளமலி செல்வச்
சந்நிதி பணிசெயச் செல்லாத திருமலி செல்வரா வரே.

செய்ய மேனியர் செந்நிற ஆடையர் செறுநர்த் தேய்த்த
கையமர் வேலினர் கழலணி காலினர் காப்பவர் கடம்பினர்
வையவரர் சிலம்பணி தழங்கொலி தாழாத் தொண்டைமா னாறுமேய
முயர்செல்வச் சந்நிதியான் அடிபடச் செடிநோய் நொடியொடி படுமே.

பிரணவம் உணராப் பிரமர் சிறைபுகப் பெருஞ்சூ பீறமுகக்
அருமையால் படைத்தருள் வேடம் பயின்ற கந்தவேள் கடவுள்
சரண கமலம் மலர்பணி அலைசொரி தொண்டைமா னாற்றுறை
முரகுறு செல்வச் சந்நிதி பணிசெயப் பிணிவரத் துணியாவே.

இமையவர் அருச்சனை இன்பினால் இயற்ற அவர்க்கருள் புரியுமெம்
உமையவள் காதலர் பவளமில் உரையிலாப் பூசை உவந்து
எமையான ஆறிலை அமுதுண்டு ஆற்றங் கரைதனில் அருளரசு
அமைந்த செல்வச் சந்நிதி பேரொளிமுன் செலப்பேரருள் பெறுமே.

சிவ. சண்முகவடிவேல்

# சுடர் தரும் தகவல்

"எல்லாக் கிறிஸ்தவர்களும் அங்கீகரிக்கும் கிறிஸ்தவம் இதுவே யாயின் இதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. என்னுடைய பாவங்களின் விளைவுகளிலிருந்து விமோசனம் பெற்றுவிட வேண்டும் என்று நான் நாடவில்லை. பாவத்திலிருந்தே அதாவது பாவ எண்ணத்திலிருந்தே விமோசனம் பெறுவதைத்தான் நான் நாடுகின்றேன். அந்த இலட்சியத்தை நான் அடையப்படும் வரையில் அமைதியின்றி இருந்தாலும் திருப்தியடைவேன்"

நமது பாவங்களுக்காக யேசுநாதர் துன்பங்களை அனுபவித்தார் மனிதவர்க்கத்தின் எல்லாப்பாவங்களுக்கும் அவரே பிராயச்சித்தும் தேடினார் எனவே பாவ விமோசனத்தைப் பெற்று நாம் நிம்மதியாக இருக்கலாமென்ற வகையில் கிறிஸ்தவ அன்பர் ஒருவர் கூறிய வாதத்திற்கு பதிலளிக்கும் வகையில் மகாத்மா காந்தியடிகள் கூறிய பதிற்கருத்தை அவரது சுயசரிதை நூலிலிருந்து மேலே தந்துள்ளோம்.

இவற்றிலிருந்து இரண்டு விடயங்களை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. ஒன்று பாவம் செய்த பின்பு பிராயச்சித்தம் தேடுவதை விட பாவத்தையே செய்யாதிருக்க வேண்டுமென்ற உயரிய கருத்தையே எமது மதம் அடிப்படையாகக் கொண்டது. அதுமட்டுமன்றி பாவம் செய்தவன் தண்டனையை அனுபவித்தே தீரவேண்டுமென்பதையும் வலியுறுத்துகின்றது.

காந்தியடிகள் இந்த விடயத்தில் ஒரு படி மேலேசென்று பாவம் செய்யாமல் இருப்பது மட்டுமல்ல பாவ எண்ணத்திலிருந்தே விடுபட வேண்டுமென்ற நிலைக்கு தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்ட பெருந்தகையாக இந்த வையகத்தில் வாழ்ந்த மகான் என்பதை நாம் எல்லோரும் தெரிந்திருக்க வேண்டியது இரண்டாவது விடயமாகும்.

வாழ்க்கையில் சராசரிமனிதனாக மனித நேயத்துடன் வாழ்க்கையை நடாத்துவதிலேயே பல்வேறு சவால்களை நாம் எதிர்நோக்கவேண்டியுள்ளது. ஆனாலும் எம்மைப் போலவே சராசரி மனிதனாக தன்வாழ்க்கையை ஆரம்பித்த காந்தியடிகள் அந்த நிலையைக்கடந்து நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத, மனித தர்மத்தை விஞ்சியதும், தெய்வ அம்சங்கள் நிறைந்ததுமான காரியங்கள் பலவற்றை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து அதில் வெற்றியும் அடைந்துள்ளார். இதனால்தான் அவரை சாதாரண ஆத்மா என்ற நிலையில் நோக்காது "மகாத்மா" என்ற நிலையில் உலகம் போற்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர்

திரு. க. குமாரதாசன்
( பொதுச்சுகாதார பரிசோதகர், நயினாதீவு )

திரு. A. நவராஜலிங்கம்
( களஞ்சியப் பொறுப்பாளர் ப.நோ.கூ.ச. தலைமையகம், உடுப்பிட்டி )

உரிமையாளர்
( பகலோன் வர்த்தக நிலையம் மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் )

திருமதி பி. மாலினி
( கலாச்சார உத்தியோகத்தர் பிரதேச செயலகம், கோப்பாய் )

அதிபர்
( யா / அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி )

திரு. நா. உமாசங்கர்
( கபூரி வீடியோ, அச்சுவேலி )

அதிபர்
( அ. மி. கல்லூரி, உடுப்பிட்டி )

திரு. Dr. S. யோகேஸ்வரதேவர்
( கரவெட்டி )

அதிபர்
( யாழ் / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி )

திரு. க. இரத்தினம்
( கிராம உத்தியோகத்தர், கரணவாய் தெற்கு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்
( வடஇந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை )

திரு. சி. முருகவேல்
( கிராம அலுவலர், இடைக்காடு )

அதிபர்
( சிவப்பிரகாச வித்தியாசாலை, தும்பளை )

திரு. நா. அருணகிரிநாதன்
( சன்வரி இல்லம், புத்தூர் )

அதிபர்
( கரவெட்டி மகாவித்தியாலயம், கரவெட்டி )

திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா
( பிரதி அதிபர், அச்சுவேலி மகாவித்தியாலயம் )

திரு. க. சிவகுருநாதன்
( துவாரகா பேக்கரி, நவிண்டில் )

அதிபர்
( யா / விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி )

திரு. சி. சிவச்செல்வம்
( அதிபர், விநாயகர் வித்தியாலயம், வல்வெட்டி )

செயலாளர்
( மாவிக்க இடைக்காடர் ச. ச. நிலையம், இடைக்காடு )

செயலாளர்
( கலைமகள் ச. ச. நிலையம், இடைக்காடு )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முருக மந்திரம்

## தானாய் நிலை நின்றது தற்பரமே

— செந்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் —



வேதங்கள் இறைவனை ஒலி வடிவாகவும் ஒளி வடிவாகவுமே காட்டுகின்றன. ஒலி வடிவாக இருக்கின்ற இறைவனை மந்திரங்களாலும் ஒளி வடிவாய் இருக்கும் இறைவனை அக்கினியிலும் வேத கால மக்கள் வழிபட்டு வந்தார்கள். எல்லா நூல்களுக்கும் ஆதியாய் உள்ள ஆதி நூலாகவும் அறிவு நூலாகவும் வேதங்கள் திகழ்கின்றன. வேத மந்திரங்கள் காட்டும் விழுமிய பொருளாகத் திகழ்பவன் ஞான பண்டிதனாகிய முருகன் என்பதை

நாத விந்து கலாதி நமோ நம
வேத மந்த்ர சொரூபா நமோ நம
ஞான பண்டித சாமீ நமோ நம

என அருணகிரிநாதர் திருப்புகழில் குறிப்பிடுகிறார். உண்மையான அடியவனைத் தாங்கிக் கொள்கின்ற பொறுப்பு இறைவனுடையதே ஆகும்.

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

என்ற அப்பர் பெருமானுடைய தேவார வரிகள் இதனை உணர்த்துகின்றன. ஞான பண்டிதன் ஞானத்தைத் தரும் நூல்களுட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னையே பெருமைநற் போக்குவாய் மனதிற்கு எட்டாதவராகவும் தேவ லோகத்தின் ஏகாதிபதியாகவும், தேவ சேனாதிபதியாகவும் கலியுக வரதனாகிய கந்தவேட் பெருமானை திகழ்கிறான். ''ஏக சிந்தத்துடன் உமது திருவடியையன்றி வேறு எவ் வித பற்றுக்கோடும் இல்லா தவனா கிய அடியேன் திருவருளைப்பெற்று உய்யுமாறு தேவரீர் ஒரு சிறிதள வேனும் நினைக்கவில்லையே! '' என்று அன்புரிமையுடன் அருணகிரி நாதர் முருகனிடம் வேண்டுவதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

ஆதாரம் இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோதமனோ
தீதா சுரலோகசிகா மணியே.

இந்த உலக வாழ்வும் செல்வ மும் மின்னல் தோன்றி உடனே மறைவது போல மறையக்கூடியன. உலக சுகங்களை நாடிச்செல்லும் மனத்தை அப்படிச் செல்லாமல் இழுத்துப் பிடித்துத் தெய்வத்தை நோக்கிச் செலுத்தினால் ஆன்மா விற்குப்பாரிய நலன்கள் விளையும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது போல மானுட உடம்பு இருக்கும் பொழுதே ஆன்ம நலத் தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உடலில் இருந்து உயிர் பிரிந்து சென்றதும் உற்ற சுற்றம், நண்பர்கள் அனைவரும் ஒன்று கூடி அழுவார்கள். பெயர் சொல்லி அழைத்தவர்கள் அனைவரும் உயிர் நீங்கிய பின்பு பிணம் என்று அஃறி ணைப் பெயரில் தான் அழைப்பார் கள். உடலையும் கொண்டு போய்ச் சுடு காட்டில் சுட்டு விட்டு நீரில் மூழ்கி இறந்தவரின் நினைப்பை யும் மறந்து விடுவார்கள். இவ்வாறு உடலின் சோகக்கதையைத் திருமூல ரின் பாடல் பின்வருமாறு சித்திரிக் கிறது.

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

நிலையில்லாத உலக வாழ்வை நிலையானது என நினைந்து அடி யேன் அலைவதற்குக் காரணம் யாதோ? ஊழின் வலிமை தான் இதற்குக் காரணமோ? அழியும் உலக வாழ்வை விரும்புவது இறை யருளைப்பெறுவதற்குத் தடையாக அல்லவா அமைந்துள்ளது. பொன் போன்ற அருமை வாய்ந்தவரே! மணி போல ஒளி வீசுபவரே! உண் மைப் பொருளே! பேரருளுடைய வரே! திசை பெற்ற தலைவரே!

விலையுயர்ந்த பொருள் ஆசையின்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலை வாகனமாகவுடையவரே! நிலையில்லாத வாழ்வை விரும்பும் நிலையை அகற்றி அநுபூதி ஞானத்தைப் பெறுவதற்கு அருள் செய்! யாறு அருணகிரியார் முருகப்பெருமானிடம் இரந்து வேண்டுவதைப் பின்வரும் கந்தரநுபூதிப் பாடல் விளக்குகிறது.

மின்னே நிகர் வாழ்வை விரும்பியயான்
என்னே விதியின் பயனிங்கிதுவோ
பொன்னே, மணியே, பொருளே, அருளே,
மன்னே, மயிலேறிய வானவனே.

சிவன் சேர்க்கையுடன் அத்துவிதமாகிக் கலந்து நின்ற போது விளையும் பேரின்ப நிலையை வார்த்தைகளால் விளக்க முடியாது. வாழ்க்கையில் நாம் பெறும் எல்லா அநுபவங்களையும் விளக்கிக்கூற முடியாது. சிலவற்றை அநுபவிக்கும் காலத்தில் உணரலாமே ஒழிய அவற்றை வார்த்தைகளால் விளக்க முடியாது. இறையருளாற் பெறும் தெய்வீக அநுபவமும் அத்தகையதே ஆகும். தலைமகளுக்குத் தாய் தன் வாழ்வில் பெற்ற எல்லா அநுபவங்களையும் விளக்க முடியாது. சில அநுபவங்களை, இன்ப நுகர்வுகளைப் பிள்ளை தானே அநுபவித்துத் தான் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஆன்ம ஞானத்தைப் பெறுவதற்கு உள்ளுணர்வுடன் கூடிய அகப் பார்வை வேண்டும். இந்த உண்மையைப் பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமாறெங்ஙனே.

ஊமை தான் கண்ட கனாவைச் சொல்ல முடியாது தவிப்பதைப் போலவே செவ்வுக்குள்ளே சிவ ஞானம் முதிர்ந்த நிலையில் விளங்கும் அநுபூதிச் செல்வர்களின் நிலையும் காணப்படும்.

ஞான பண்டிதனாகிய முருகப் பெருமான் சத்து, சித்து, ஆனந்தம் ஆகிய மூன்றும் இணைந்துள்ள சச்சிதானந்த வடிவினனாகக் காட்சி தருவான். ஆன்மாவை அநாதியாகவே பற்றி நின்று அறியாமையில் அமிழ்த்துகின்ற ஆணவத்தின் வலிமை குறைந்ததும் சீவபோதம் நீங்கிச் சிவபோதம் தலையெடுக்கும் சிவபோதம் நீங்கியதும் காண்கின்ற காட்சிகள் யாவும் சிவமயமாகவே இருக்கும். கெடுதலில்லாத அமுதம் போன்ற இனியவரே! கூரியவேலை ஏந்திய அரசே! ஞானத்துக்கு இருப்பிடமானவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னிடம் இருக்கின்ற ஜீவ போதத்தை விழுங்கி சிவானுப வத்தை எனக்கு தந்த பேற்றினை வார்த்தைகளால் எவ்வாறு கூறு வேன்" என்பதை அருணகிரியார் பின்வரும் அநுபூதிப் பாடலில் விளக்குகிறார்.

ஆனா அமுதே! அயில் வேல் அரசே
ஞானா கரனே! நவிலத் தகுமோ!
யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே.

( தொடரும் ........

பலவித வண்ணங்களிற் பார்ப்பதற்கே அழகான சிருஷ்டியாக அமைந்திருப்பவை மலர்கள். அவற்றின் வாழ்க்கை மிகக் குறுகியது. ஆனால் அந்தச் சொற்ப நேரத்திலேயே அது காற்றில் மணம் நிரப்பி நம்மை எல்லாம் மகிழ்விக்கிறது. தன்னிடம் உள்ள மகரந்தத்தை வண்டுகளுக்குக் கொடுத்து விடுகிறது. தன்னுடைய பெருமையை எந்தவிதமாகவும் வெளிப்படுத்திக் கொள்ளாமல் தியாக உணர்வுடன் சேவை செய்கிறது.

அதேபோலப் பழங்கள் மரத்தின் சத்து அவ்வளவையும் உறிஞ்சி எடுத்து, மனிதனும் மிருகங்களும் பறவைகளும் வாழ உணவாகக் கொடுக்கின்றன. தகுந்த பக்குவத்தில் இனிமையுடன் தம்மைப் பிறருக்கு உணவாக ஈந்து தியாகம் செய்து கொள்கிறது. பழத்தைப் பறிக்காமல் விட்டுவிட்டாலும், அது கனிந்து உதிர்ந்து மண்ணோடு கலந்து தனது சதையைப் புழுப்பூச்சிகளுக்கும், விதையை மண்ணில் மீண்டும் உயிர்ப்பிக்கவும் கொடுத்து உதவுகிறது.

மலர்களும் கனிகளும் இயற்கையின் வடிவங்களில் தியாக உணர்வைக் காட்டும் அற்புதமான சின்னங்கள். அதனால் அவை இரண்டும் ஆண்டவனுக்கு மிகவும் உகந்தவையாக விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் இந்துமதம்

(தொடர்ச்சி –

— கோப்பாய் சிவம் —

இன்றைய நமது சமயத்தை நோக்கினால், இந்து மதம் – சைவ மதம் – தமிழர் மதம் என்ற பெயர்களெல்லாவற்றையும் கடந்து அது ஒரு புதிய சமயமாக இருக்கிறது. அதே நேரத்தில் அது சநாதன தர்மமாகவும் இருக்கிறது. (முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே.) வேதமரபு, இதிகாச – புராண மரபுகள், தர்மசாஸ்திர மரபு, ஆகம மரபு, சைவ சித்தாந்தமரபு, பழந்தமிழர் மரபு இவை மட்டுமல்லாமல், பௌத்த, சமண மரபுகள் கூட இன்றைய நமது சமய மரபில் இணைந்து கலந்து விட்டன. அதே போலப் பழைய மரபுகள் பல கைவிடப்பட்டுவிட்டன.

ஒரு காலத்தில் நமது சமயம் சமூகத்துக்கு அப்பாற்பட்டதாக, தனிப்பட்ட சிலரின் சொத்தாக இருந்திருந்ததும் உண்டு. பின்னர் அது மக்கள்மயப்படுத்தப்பட்டதும் உண்டு.

நமது சமய மரபிலே காலத்துக்குக்காலம் அறியாமை காரணமாக (முதலாளித்துவ பூர்ஷ்வாத் தனங்களாலும்) நச்சுப்புகை பரவியதுண்டு. மூடநம்பிக்கைகள் மேலெழுந்ததும் உண்டு. அவற்றைக் களையெடுத்துச் சீர் செய்து சமயப் பயிரை வளர்த்தெடுக்கச் சமய, சமூக சீர்திருத்த இயக்கங்கள் பல தோன்றியதும் உண்டு. அவற்றின் விளைவாகப் பல தவறுகள் கைவிடப்பட்டுப் புதிய போக்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் அவதானிக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு விடயத்தை நோக்கலாம். வேதத்திற் கூறப்பட்ட வருணப் பாகுபாடும் ஆகமத்திற் கூறப்பட்ட சாதிப் பிரிவினைகளும் எதற்காகச் சொல்லப்பட்டனவோ தெரியாது. ஆனால் அது நடைமுறை வாழ்க்கையில் மனித சமுதாயத்திடையே ஒரு விஷ விருட்சமாக வளர்ந்தது. பல சீர்திருத்தப் போராட்டங்கள், ஆலயப் பிரவேச முயற்சிகள் நடைபெற்ற போது சமயமே ஆட்டம் கண்டு விட்டது என அலறியவர்கள் பலர். ஆனால், என்ன நடந்தது? இன்று அது பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. சமயத்தில் அது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சமயம் தன்பாட்டில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

உயிர்க் கொலையும் மதுப் பாவனையும் மாமிச போசனமும் எமது (ஆரியர், திராவிடர் ஆகிய

சிந்தனையை விட உணர்ச்சி ஆழமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு இருக்கும்) முன்னோர்களுடைய மரபு. வேதங்களை விதிகளிடமும் பொய்யடிமை இல்லாத புலவோர் ஆகிய சங்கத்துச் சான்றோரிடமும் இப்பழக்கங்கள் இருந்தன. ஆனால் இடையில் வந்த சமண, பௌத்த மரபுகள் இவற்றைக் கண்டித்தன. (இதில் அதிசயம் என்னவென்றால் இவர்களும் ஆரியர்கள் தான்) இதனால் எமது சமயத்திலும் இவை விலக்கப்பட்டதுடன் பஞ்சமா பாதகங்கள் என வெறுத்து ஒதுக்கப்பட்டன. சமயம் வளர்ந்தது. இவை இருந்த போதும் மக்கள் கடவுளை வழிபட்டனர். கடவுள் அவர்களுக்கு அருள் புரிந்தார். பின்னர் இவை கைவிடப்பட்ட போதும் மக்கள் கடவுளை வழிபட்டனர். கடவுள் அவர்களுக்கு அருள் புரிந்தார்.

இன்று....? கைவிடப்பட்ட இந்தப் பஞ்சமா பாதகங்கள் சைவப் பெருங்குடி மக்கள் பலரால் — உயர் சைவ வேளாள மரபினர், ஆலய பரிபாலகர்கள், சைவசமய நிறுவனங்களின் அங்கத்தவர்கள், சமயக்குறை பாடுகள் பற்றி மேடைகளில் முழங்குவோர், எழுதுகோலால் சாடுவோர் எனப் பலதரப்பட்ட சைவ அபிமானிகளாலே பகிரங்கமாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றும் மக்கள் கடவுளை வழிபடுகின்றனர். கடவுள் அவர்களுக்கு அருள் புரிகின்றார்.

அப்படியானால் எது சரி? எது பிழை?

எல்லாம் மாறி மாற்றங்களைப் பொறுத்தே. மனித சமூகத்தின் அமைப்பு முறைக்கிணங்கவே சமய வழிபாட்டு முறைகள் உருவாக்கம் பெற்றுப் பரிணாமம் அடைந்து புதிய பரிமாணங்களைப் பெற்று அதற்கேற்பப் பிரமாணங்களையும் உருவாக்கிக் கொள்ளுகின்றன.

சமய சீர்திருத்த இயக்கங்களின் வரலாறுகளை நன்கு அவதானித்தால் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். பல்வேறு குற்றங் குறைகள் இவ்வியக்கங்களினால் சீர்திருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் உருவ வழிபாடு, ஆலய வழிபாடு, விழாக்கள், கொண்டாட்டங்கள், கிரியை மரபு, குருத்துவ அல்லது புரோகித மரபு முதலிய சில அடிப்படை அம்சங்களை இவர்களால் அசைக்கவே முடியவில்லை. இவற்றை நீக்கி விட்டுச் சமய நம்பிக்கையையோ இறை பக்தியையோ மக்களிடம் வளர்க்க முடியாது. மனித இனத்தின் உளவியல் மரபிலும் வாழ்க்கை முறையிலும் இவை ஆழமாகப் பதிந்துவிட்டன.

உயிரியல் விஞ்ஞானம் படித்தவர்களைக் கேட்டால், கிரியை மரபும் புரோகித மரபும் விலங்குகள் பறவைகளிடம் கூட எவ்வாறு பதிந்துகிடக்கின்றன என்று கூறுவார்கள். இங்கு கிரியை மரபும் புரோகித மரபும் என்று கூறுவது பூநூல் அணிந்து குடுமி வைத்து மணி அடித்துச் "சுக்லாம்பரதரம்" கூறுவதையல்ல. 'மயில் முறைக் குலத்துரிமை' என்று கம்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னது என்னவென்று இலக்கியகாரரிடம் கேட்டால் இதற்கு விளக்கம் தெரியும்.

அதாவது HERO WORSHIP எனப்படும் தலைமைத்துவ வழிபாடு. பழைமை போற்றும் பாரம்பரிய மரபுமுறை எனப்படவும் சில செயற்பாட்டுமுறைகளும் (கிரியை) எல்லா உயிரினங்களிடமும் இரத்தத்தோடு ஊறியிருப்பன.

பிரம்ம சமாஜத்தினரும் ஆரிய சமாஜத்தினரும் உருவ வழிபாட்டை எதிர்த்தவர். பழமையைக் களைந்து புதுமையைக் காணப் புறப்பட்ட ராஜா ராம் மோகன் ராயும் (பிரம்ம சமாஜம்) உருவ வழிபாட்டையும் கிரியைகளையும் எதிர்த்தனர். புதுமை வேண்டாம் வேதகாலத்துக்கு திரும்புவோம் என்று கூறிய தயானந்த சரஸ்வதியும் (ஆரிய சமாஜம்) உருவ வழிபாட்டையும் கிரியைகளையும் எதிர்த்தார்.

உலகளாவிய வகையில் பல போராட்டங்கள் நடாத்தி மக்களை விழிப்படையச் செய்த இவ்விரு இயக்கங்களையும் சிறிது காலத்தின் மக்கள் மறந்து புறக்கணித்துவிட்டனர். ஏனென்றால் இவர்கள் உருவ வழிபாட்டுக்கும் கிரியைகளுக்கும் எதிரிகள் என்பதால்தான்.

“கடவுள் இல்லை. வழிபாடு தேவையில்லை. ஒழுக்கம், அஹிம்சை, அறிவு இவையே வாழ்க்கைநெறி” என்று போதித்தார் புத்தர். அதனை ஏற்றுக் கொண்ட பல லட்சம் மக்கள் அவரையே கடவுளாக்கி அவருக்கே உருவம் அமைத்து ஆலயம் கட்டிக் கிரியைகள் செய்து வழிபடுகிறார்கள்.

இறைவன் உருவம் அற்றவன் என்று போற்றும் இஸ்லாமிய சமயம் உருவ வழிபாட்டை எதிர்க்கிறது. ஆனால் இஸ்லாமியர்களின் இல்லங்களில் 'கஃபா' எனும் வணக்கத்தலம் உருவச் சின்னமாகக் காட்சி தருகிறது. 'கஃபா' விற்குச் சென்று அவர்கள் வழிபடும்போது செய்யும் கிரியைகள் நமது பிரதோஷ வழிபாட்டுக்கான சோமசூத்திரப் பிரதட்சணம் போலச் சிக்கலான ஒன்று.

இந்துசமயம் என்பது பாரம்பரியமான ஒரு மாபெரு விருட்சம். அதனை அடியோடு வெட்டிப் புரட்டிவிட்டு வேறொரு மரத்தை நடலாம் என நினைப்பவர்கள் மூடர்கள். அதன் கிளைகளை வெட்ட முற்பட்டோர் பலர். அதன் அருகில் வேறு மரங்களை நாட்ட முற்பட்டோர் பலர் தவறாக வளைந்து, நெளிந்து பரப்பிய கிளைகள் தறிக்கப்பட்ட போது அதனை மரம் ஏற்றது. அருகில் நடப்பட்ட புதிய மரங்களைக் கொடிகளாக்கித் தன்மீது படரச் செய்து அதன் நல்லியல்புகளைத் தானும் ஏற்றுத் தனது நல்லியல்புகளை அதற்கும் கொடுத்து - கொண்டும் - கொடுத்தும் வளம் பெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த

நல்ல ஆலோசனையைக் கேட்பது நமது திறமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதும் எனினும் இந்தப் பெரு விருட்ச நிழலில் நிற்பவர்கள் கிளை களை வெட்டவெட்டப்போது "ஐயோ, எங்கள் மரத்தின் கிளைகளை வெட்டுகிறார்களே" என அழுதனர். வேறு மக்கள் நட்டி பட்டபோது "ஐயோ, எங்கள் மரம் அழியப்போகிறதே" என ஓலமிட்ட னர். ஆனால் மரம் எதற்கும் கலங் காமல் வளர்ந்து நிழல் பரப்பிக் கொண்டுதான் இருக்கிறது.

## உனது கடமை

வீட்டிலாயினும் வேலைத் தலத்திலாயினும் நீ என்ன செய்ய முயன்றாலும் முதலில் இறைவனை வணங்கி, உன்னை நன்றாக ஒப்படைத்து விட்டு வேலையைத் தொடங்கு.

எந்த வேலையைச் செய்தாலும் நூற்றுக்கு நூறு மனத்தோடு நேர்மையாக உன் வேலையைச் செய். நேர்மை உடனடியாகப் பயன் தராவிட்டாலும் நாளடைவில் பயன் தரும். ஒரே நேரத் தில் இரண்டு வேலைகளில் ஈடுபடாமல், ஒவ்வொன்றாக இரண் டையும் நிதானமாகச் செய். ஒரு கல்லால் இரு பறவைகளை விழுத்தப் போனால் ஒரு பறவையும் விழமாட்டாது.

நீ வேலை செய்யும் தொழிலகத்தின் புகழையும் தரத்தை யும் பெருமையையும் கெடுத்துவிடாமல் உன்னால் முடிந்த அளவு மனச்சாட்சிக்குப் பிழையில்லாமல் வேலை செய். மிகக் குறைந்த செலவில் மிகக் கூடிய பயன் பெறக்கூடியதாக நீ வேலை செய்தல் வேண்டும் என்பதை உன் கோட்பாடாகக் கொண்டு நட.

ஒத்துழைப்பு, கீழ்ப்படிவு என்பன இன்சொல்லாலேயே பெறக்கூடியவை. எதையும் உரியவேளையிற் செய்து முடிக்கப் பார். இன்று செய்ய வேண்டியதை நாளைக்குச் செய்யலாம் என்று பின்போடாதே.

ஏதாவது முறையில் மற்றவரைத் தாக்கிப் பேசுவதாயிருந் தால் பலமுறை யோசித்துப் பேசு அல்லது செய்.

மனிதன் உயர்வது விதியால் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் முருகா

# செல்வச் சந்நிதி முருகப் பெருமான்

— ச. கு. இருவுணசாமி —



வீரவாகுதேவர் என்பவர் முருகப் பெருமானின் தாதுவராக வந்து, வல்லி ஆற்றங்கரையில் உன்ன மரநிழலில், வேல் ஒன்றை வைத்துச் சந்திக்காலப் பூசை செய்தார். இது, ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் பின் நடந்தது.

சில காலங்களுக்குப் பின் இவ ராக என்பவர், வீரவாகுதேவர் வழிபட்ட வல்லி ஆற்றங்கரையில், ஓர் பூவரசமரத்தின் கீழ் தவ மிருந்து, முருகனை வழிபட்டு முத்தி அடைந்தார். இவரது சமா தியின் மீதே, தற்போதைய ஆல யம் அமைந்துள்ளது.

சில காலங்களுக்குப் பின்னர், நாற்பெற்றுபத்தைந்து வருடங்களுக்குமுன் பின்னாக மருதர்ன் மகன் கதிர்காமர், ஆற்றிலே பரதவகுலத் தொழிலினை மேற்கொண்டிருந்த சமயம், முருகப்பெருமான் ஆடு மேய்க்கும் சிறுவனைப்போலவந்து, கதிர்காமரைக் கரைக்கு வரும்படி அழைத்தார் கதிர்காமர் கரைக்கு வந்து, 'என் கூப்பிட்டது?' என வினவினார். "இனி இந்த உழைப்பு வேண்டாம்; உமக்குத் தேவை யானவற்றை நான் தருகிறேன்: நீ அறுபத்து நான்கு ஆலம் " இலை களில் உணவு படைத்து வழிபடு" என்றார். கதிர்காமர் அதிசயப் பட்டு, 'நீர்யார்? என வினவினார். உடனே, முருகப்பெருமான், தன் உருவத்தைக் காட்டி; அவ்விடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் முன்பு நடந்த விடயங்களைச் சொல்லித் தனக்குப் பூசை செய்யுமாறு கதிர்காமரைக் கேட்டார். கதிர்காமர், தனக்குப் பூசை செய்யும் முறைகள், மந்திரங்கள், தெரியாது என்றார். உடனே, முருகன் "கண்களை மூடுக" எனக்கூறி நொடிப் பொழுதிலே; கதிர்காமரைக் கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்று, அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டி, "நீரும் வாய் கட்டி, மந்திரம் இன்றிப் பூசை செய்யும் எனக்கூறி வேல் ஒன்றையும் வழங்கி, "இதை அமைத்து வழிபடுக எனக்கூறிக் கதிர்காமரிடம் ஓர் வேலையும் கொடுத்தார். கதிர்காமர் அதைப் பெற்று முருகன் கூறியபடி பிரதிஷ்டை செய்து 30-05-1840 ஆம் ஆண்டு தொடக்கம் வழிபட்டார்.

இப்படியாகப் பூசை செய்து வந்த பொழுது ஒருநாள், முருகப்பெருமான், கதிர்காமரிடம், "நான் கதிர்காமம் செல்ல வேண்டும், என்னை வழி அனுப்புக" எனக் கூறவே, பயணச் சாப்பாட்டிற்காக உழுந்தும் பிட்டும் படைத்துக் கதிர்காமத் திருவிழாவுக்கு வழி அனுப்பி வைத்தார்.

கதிர்காம உற்சவம் முடிந்த நாள் இரவு கோவில் மணி ஓசை கேட்டது. கதிர்காமர் விரைந்து சென்று கோவிலுக்குள் நுழைந்த போது, முருகப்பெருமான் நிற்பதைக் கண்டார். முருகன், "பயணத்தால் களைத்துப் போனேன்; பயற்றம் துவையலும் இளநீரும் தருக" எனக் கேட்டார். கதிர்காமர் அவற்றை வழங்கியதாக வரலாறு கூறுகிறது. இன்றும் இவை நடைமுறையில் உள்ளன.

## பிரார்த்தனை எப்படிச் செய்வது ?

எந்த வேளையும் இறைவனை நினைக்கவேண்டும்; அது ஆரம்பத்தில் முடியாவிட்டால்; மூன்று வேளைகளில் தவறாமல் நினைக்கவும்.

காலை எழுந்தவுடன், 'இறைவனே, இன்று நான் நல்வழியில் நிற்க அருள் புரி' என்று தொழவும்

உணவு உட்கொள்ளும் பொழுது, 'இறைவனே, இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும் அன்பும் உண்டாக அருள் புரி' என்று தொழவும்.

இரவில் படுக்கும்போது, 'இறைவனே, இந்த உறக்கத்திலே, உன் எண்ணமே நிற்க அருள்புரி' என்று தொழவும்.

ஊழ் நல்லவருக்கு வழி காட்டிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ





# குறளமுதம்

## அறத்தின் நாயகம்

— டாக்டர் மு. வரதராசனார் —

திருவள்ளுவர் நெஞ்சார வழிபட்ட கடவுள் அறக்கடவுளே. அறம் அவருக்கு வழிபடு தெய்வமாக இருந்தது போலவே, பொருள், இன்பம் இரண்டிற்கும் அடிப்படையாகவும் அமைந்திருந்தது. அதனால், அறவழிப்பட்டு, அறநெறியிற் பொருள் ஈட்டி, அறத்துறையில் இன்பம் நுகர வேண்டும் என்று அவர் பொதுமறை இயற்றி அருளினார்.

திருவள்ளுவர் உலகம் போற்றும் பெரியார். அவர் பெருமைக்குக் காரணம் அவர் வாழ்ந்து, மெய்யுணர்ந்து, போற்றி எழுதிய அற நூலேயாகும். திருவள்ளுவர் பெருமை இந்த ஈராயிரம் ஆண்டுகளாக துலங்கி விளங்கியது போலவே இனியும் உலகம் உள்ள வரையில் சிறந்து நிற்கும். காரணம் வேறொன்றும் இல்லை; அவர் கூறும் உண்மைகள் ஒரு காலத்தில் மெய்யாய், மற்றொரு காலத்தில் பொய்யாய்ப் போவன அல்ல; ஒரு காலத்தில் மதிப்புடையவையாய், மற்றொரு காலத்தில் மதிப்பிழந்து போவன அல்ல. ஒரு காலத்தில் நம்பிக்கைக்குரியவையாய், மற்றொரு காலத்தில் நம்பத்தகாதனவாய்ப் போவன அல்ல. அந்த உண்மைகள் என்றும் நிலைபெறும் உண்மைகள்; அறமே வாழ்க்கையின் அடிப்படை என்று தெளிந்த நெறியில் கண்ட உண்மைகள்; அறவாழ்க்கை நடத்திய ஒரு பெருந்தகையின் உள்ளத்தில் பூத்த உண்மைகள்.

அற வாழ்க்கையை வற்புறுத்தத் தொடங்கிய வள்ளுவர் மனமாசு நீங்குதலே அறம் என்கின்றார். பொறாமை, அவா, வெகுளி, கடுஞ்சொல் இவை நீங்கினால், அறம் நிலவும் என்கின்றார். இத்தகைய அறத்தை இயன்ற போதெல்லாம் செய்தல் வேண்டும் என்கின்றார். இயன்ற அளவெல்லாம் செய்தல் வேண்டும் என்கின்றார்; அற வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்று தெளிவிக்கின்றார்.

விடிவுக்கு முன் மிகவும் இருட்டாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அறன் வலியுறுத்திய பெரியார், அற வாழ்க்கையின் பயனை எடுத்துரைத்தது போல் வேறு எவரும் உரைக்கவில்லை. "இம்மையில் துன்பப்படுங்கள், மறுமையின்பம் உங்களுக்கு உண்டு" என்றும், "உலகத்தில் பொருள் தேடப் புகுந்தால் அறத்தைக் கைவிட வேண்டும்" என்றும் ஒரு புறம் ஆத்திகத் துறவிகளும், மற்றொரு புறம் நாத்திகச் செல்வர்களும் எடுத்துரைத்துப் பாமர மக்களை மயக்கில் கலக்கி வருவதையே உலகெங்கும் காண்கிறோம். இவர்களுடைய மயக்கமும் திருக்குறளைப் படித்தவர்கள் முன்னே என்ன செய்யும்?

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல"

இந்த இரண்டு குறள்மணிகளை உண்மை என்று தெளிந்தவர்களே தாமும் வாழ வல்லவர்கள், பிறர்க்கும் வாழ வழிகாட்ட வல்லவர்கள். மற்றவர்கள் ஏமாந்தும் ஏமாற்றியும் வாழ்கின்றவர்களே.

சிறப்பு, செல்வம், இன்பம் இவற்றை அருள்வது அறமே என்கிறார் வள்ளுவர். ஆனால், எப்படி நம்புவது என்று எளிதில் கேள்வி பிறக்கும். மனச்சான்றை விலைக்கு விற்று, அறத்தை அடியோடு அகற்றிவிட்ட ஒரு சில மக்களே இன்று இந்த உலகத்தில் சிறப்புப் பெற்று விளங்குகின்றார்கள். அற உபதேசத்தைப் பிறருக்காக ஒதுக்கி விட்டுத் தங்களுக்கு வேறு தனி வழியை வகுத்துக் கொண்ட ஒரு சிலரே இன்று இந்த உலகத்தில் செல்வம் பெற்று விளங்குகின்றார்கள். செல்வமும் சிறப்பும் பெற்ற பிறகு என்ன செய்தாலும் கவலையில்லாமல் இன்பமாக வாழ முடியும் என்று கூறுவோர், கொலையிலும் கொள்ளையிலும் நம்பிக்கை வைத்துள்ள ஒரு சிலரே இன்று இந்த உலகத்தில் இன்பம் பெற்றவர்கள் போல் தோன்றுகின்றார்கள்.

ஆனால், எல்லாம் நாம் செய்த தவறு. ஏட்டில் படிப்பதற்கு மட்டும் அறம், ஏற்றமான அரசியலுக்கு அறம் வேண்டா என்று ஒதுக்கி வாழ்ந்தோம். அது தவறு தானே? பிறர் நமக்கு இடையூறு செய்யாமல் காத்துக்கொள்வதற்கு மட்டும் அறம்; நாம் பிறர்க்குக் கொடுமை செய்யும் போது அறம் வேண்டா என்று ஒதுக்கி வாழ்ந்தோம்; அது தவறு தானே? அதனால் அல்லவோ விளைந்தது. அறத்

பொறுமையே நீடித்த பிரார்த்தனையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் நம்பிக்கை குறைந்தது. அது அன்பின் ஆற்றலில் நம்பிக்கை வந்தது.

திருவள்ளுவர், காலம் பலவும் கடந்து நோக்கும் மெய்யுணர்வு பெற்றவர். அவர் கருத்துப்படி, அறத்தின் அடிப்படையில்லாத எல்லாம் அழிந்துபோம். உலகம் அறத்தை விட்டு அப்பால் செல்லச் செல்ல, அல்லலே பெருகும் என்பது அவர் கண்ட உண்மை. அதனால், அவர் பொருட்பாலிலும் அறத்தை மறக்கவில்லை; இன்பத்துப்பாலாகிய காமத்துப்பாலிலும் அறத்தை மறக்கவில்லை.

---

## நல்ல மனமாற்றம் தேவை!

"அம்மா, தாயே! பிச்சை போடுங்கம்மா!"

கேட்டுக் கேட்டு சலித்துப் போன அதே குரல். சுமார் பத்து வருடங்களாக நாள் தவறாமல் பிச்சைக்கு வந்து விடுகிறான். இவனுக்கு இதிலிருந்து விடுதலையே இல்லையா?

பிச்சைக்காரனைத் தினமும் பார்த்துக் கொண்டிருந்த அந்த வீட்டுக்காரருக்கு, "இவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும்" என்ற எண்ணம் தோன்றியது. கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்.

"டேய் பிச்சைக்காரா! உன்னைப் பத்து வருடங்களாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எல்லோரும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உன் நிலை மட்டும் மாறவே இல்லை. இன்று உனக்கு நான் ஒரு லாட்டரி டிக்கட் கொடுத்து, அதில் உனக்கு ஒரு இலட்ச ரூபாய் பரிசு கிடைத்தால் அதை என்ன செய்வாய்?" என்றார் அந்த வீட்டுக்காரப் பெரியவர்.

பிச்சைக்காரன் சொன்னான்: "சாமி! அவ்வளவு பணம் மட்டும் எனக்கு கிடைச்சுதுன்னா இந்தப் பிச்சைப் பாத்திரத்தைத் தூக்கி எறிஞ்சிட்டு புதுசா தங்கத்துல ஒரு பாத்திரம் பண்ணி அதுல பிச்சை எடுப்பேன் சாமி!"

நம் கதியும் இப்படித்தான் இருக்கிறது. கடவுள் நமக்கு அருள் புரிய எப்போதும் ஆவலாக இருக்கிறார்.

நாம் நமது மனநிலையை உயர்ந்ததாக மாற்றிக்கொள்ள வேண்டும். அப்போது தான் இறைவன் வழங்கும் அருளைப்பூரணமாகப் பயன்படுத்தி உன்னத நிலைகளை நாம் அடைய முடியும். நாம் நமது மனப்பான்மையை மாற்றி அமைத்துக்கொள்ளாவிட்டால், இந்தக்கதையில் சொல்லப்பட்ட பிச்சைக்காரனைப் போல் அதே நிலையில் தான் இருக்க நேரிடும்.

---

அன்னையும் வாசகனையும் மறக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவ சமயத்தின் அடிப்படைத் தத்துவங்கள்

(தொடர்ச்சி .....

சைவ சித்தாந்தம்

ஆய்வாளர்: சைவசிக கலாநிதி, கனகசபாபதி நாகேஸ்வரன், எம். ஏ



நாள், கோள் பார்த்தல் இன்றும் சைவத்தமிழ் மக்களிடையே நம்பிக்கையுடன் கூடிய நடைமுறையாகக் காணப்படுகின்றது. மக்கள் தாங்கள் செய்யப்போகும் நிகழ்ச்சிகளைத் தொடங்கும் முன் நாள், கோள் நோக்கியும் பல்வகை நிமித்தங்களை ஆராய்ந்தும் செயல் தொடங்கினர்.

'புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்''
(107) என்கிறது புறநானூறு.

மக்கள் நல்ல காலம் நோக்கியும், புள்நிமித்தம் பார்த்தும் செயலாற்றியுள்ளனர் என்பது,

'' அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்
உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார், புள் ஆர்த்துப்
படை அமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர் '' (108)

தெய்வ அனுபவம் உடையவர்கள் முதலில் ஞானியர். அடுத்துக் கவிஞர். ஞான அனுபவம் தன்னனுபவமாகும். திருமுறைகளை

மரணம் நீடித்த பெருவாழ்வுக்குப் பெருவழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கும் சபாபதி நாவலர் திருமுறை இலக்கியங்கள் திரோதானம் நீக்கிய அருள்நாத ஒலியும், மற்றைத் தலைப்புலவர்கள் பாடிய பாட்டுக்கள் மாயாநாத ஒலியுமாதலின் பிறிதும் தம்முள் ஒவ்வா மாணிக்கமும் செங்கல்லும் போல்வன அவை என விளக்குவர். (109) நாயன்மார்கள் தெய்வ அனுபவத்தை இறையனுபவத்தில் நின்று பாடினார்கள். (110) அன்பினால் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மா தன்னைப் பெண்ணாகப் பாவித்தும், இறைவனைத் தன் தலைவனாகப் பாவித்து அன்பு செலுத்தும் பாவனை உண்டு. இதனை நாயக -- நாயகி பாவமாகக் கூறுவர். ஆண் பெண் என்ற உணர்வு உடல் பற்றியதேயன்றி உயிர் பற்றியதன்று; இறையுறவு உயிர் பற்றியதே. இறைவனைக் கூடுவதிலுள்ள உயிர்த்துடிப்பினையே நாயன்மார் பாடல்களில் கேட்கிறோம். பாவனை வேறு; கவிஞன் ஒருவன் கதாபாத்திரங்களில் ஒருவனாகத் தன்னைப் பாவித்துப்பாடுதல் வேறு.

பக்திப் பாடல்கள் பொது அனுபவத்தைத் தன்மையமாக நின்று பாடப்பட்டவை என்று அளவில் அடங்கி விடுவனவல்ல. தம் அனுபவத்தையே அவ்வாறு பாடியவை. பக்திப்பாடல்களைப் பாடியவர்களிடம் பல்வேறு வகையான முரண்பட்ட வாழ்க்கைக் கூறுகளை நாம் காணமுடியாது. அவர்கள் பாடல்களும் அவ்வாறே உள்ளன. அவர்கள் அனுபவமெல்லாம் தெய்வ அனுபவமே. அத்தொன்றினை பாடுகின்றனர். தனிவாழ்க்கையிலும் தெய்வச் சிந்தனையே தெய்வத்தைப் பற்றிய பேச்சு, தெய்வத்திதொண்டு, தெய்வத்தோடு ஒன்றிப்பிணைந்த வாழ்க்கை — அவர்கள் வாழ்க்கை. இவ்வாறு தெய்வத்தோடு ஒன்றிப் பிணைந்த நிலையப்பிலே அவர்கள் பெற்ற அனுபவத்தை வெளிப்படுத்துவதின் நுணுக்கமேயன்றி அவர்கள் பாடல்களுக்குப் பல்வேறு பொருள்களில்லை தன்னை இறைவனின் அடிமையாகவோ, மகனாகவோ, தோழனாகவோ, நாயகியாகவோ, தந்தையாகவோ கொண்டு அன்பு செலுத்துவர். இப் பாவனைகளையே நாம் இந்து கருத் தேவண்டும் ''அடியவர்கள் பாவனை'' வாழ்க்கை அனுபவத்தின் ஒரு கூறு. சமய சாதனையில் ஒரு கூறு. (111) உணர்வினால் இறைவனோடு ஒன்றிப் பாடுபவர்களை நாம் ''மெய்யுணர்வுக் கவிஞர்கள்'' எனல் வேண்டும். கவிதையிற் காணப்படும் தெய்வக் கூட்டுறவும், அதனை வெளிப்படுத்தி நிற்கும் உணர்வு நலனும், இவைக் கூறுமே மெய்யுணர்வுக் கவிஞர்களை இனங் காட்டி நிற்கின்றன.

"மெய்யுணர்வு இந்திய தத்துவ அறிஞர்கள் கூறும் ஞானம் போன்ற" (112)

பலவற்றையும் ஊடுருவி நிற்கும் ஓரே பொருள் மெய். அவர் அக் காட்சியிலே பெற்ற அனுபவத்தினையே அவன் இசைக்க விரும்பு

மெய்யறிவு பெற்றவன் கடவுளைப் போன்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். இத்தகைய மெய்யுணர் வாளன், மெய்யுணர்வாளன் என்ற அளவில் அமைந்து விடாது தன் அனுபவத்தைக் கலைச் சிறப்போடு படைக்கும் போது 'மெய்யுணர்வுக் கவிஞன்' ஆகிறான்.

மேலை நாட்டு அறிஞர்களின் கருத்துப்படி தியானம் கலந்து நிற்றல் அல்லது பிற கள் அனுப வங்களால் உள்ளொடுங்கி நிற்றல் அல்லது பேரின்ப நிலையில் இறை வனோடு கூடி நிற்பவையே மெய் யுணர்வு என்பர். மக்களுயிர் இறை வனோடு கொள்ளும் ஐக்கிய உற வையே இது உணர்த்தும். (113)

" சிறந்த கவிஞன் சிறந்த பகர்வியாகவுமுள்ளான். (114) பேரழகனாக விளங்கும் இறைவ னால் கவரப்பெற்று இறையனுப வத்தில் திளைத்துப் பாடிய இறை யனுபவப் பாடல்கள் மெய்யுணர் வுப் பாடல்களே. திருமுறைகளும் நாலாயிரமும் பெரிதும் இவ்வகை யால் அமைந்த பாடல்களே. இறைவனோடு கலந்து பெற்ற பேரின்ப அனுபவத்தையே சிவனடி யார்களும், திருமாலடியார்களும் பாடுகின்றனர். இவ்வடியார்கள் அனுபவம் மெய்யுணர்வு அனுபவம் அகத்தரிசனத்தின் புலப்பாடே கவி ஞர்களின் மெய்யுணர்வனுபவம். திருக்கோயிலில் கோயில் கொண் டிருக்கும் திருக்கோலத்தின் முன் நிற்கும் போது, அத் திருவடிவங் களைச் சிந்திக்கும் போது பாடல் களாக வெளிவருகிறது.

உணர்கொண்டிய மெய்யு ணர்வு அனுபவம் இறைவனோடு கலந்து நிற்கும் அத்துவித அனுப வமே.

" அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளுந் தானே அரன் " (115)

காண்போன் காட்சி, காணப் படுபொருள் இவை ஒன்றிக் கலந்த நிலையே நினைக்கப்படுகிறது. " சர்வாத்ம பாவம் " எனும் வட சொல் " ஞான அனுபவம் " என் றும் சொல்லாலுஞ் சுட்டப்படும். இதனையே நம்மாழ்வாரும்,

" என்னெஞ்சத்துள்ளிருந்திங்கு இருந்தமிழ்நூல் இவைமொழிந்து
வன்னெஞ்சத்திரணியனை மார்பிடந்த வாட்பிறழான்
மன்னஞ்ச பாரதத்துப் பாண்டவர்க்காப் படைதொட்டான்
நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள்தான் செய்வானே " (116)

என்பர்.

நூலறிவு பெற்றவன் குளத்தைப் போன்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர் தாம் பாடிய இலம்பையங் கோட்டூர்ப் பதிகம் முழுவதிலும் தாம் இறைவ னோடு கலந்து பெற்ற அத்துவித உணர்வினையே பாடுவதை "எனதுரை தனதுரையாக" என மீட்டும் மீட்டும் கூறுவதன் மூலம் விளக்குவார்.

"நீருளான் தீயுளான் அந்தரத்துள்ளான் நினைப்பவர்
மனத்துளான் நித்தமா ஏத்தும்
ஊருளான் எனதுரை தனதுரையாக ஒற்றைவெள்
ளேறுகந் தேறிய ஒருவன்
பாருளார் பாடலோ டாடல் அறாத பண்முரல்
அஞ்சிறை வண்டினம் பாடும்
ஏருளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர் இருக்கையாப்
பேணி என்னெழில் கொள்வதியல்பே" (117)

இன்னும் தாம் முற்றாக இறைவனிடம் ஒன்றி நிற்பதை,

"சிந்தையுள்ளும் நாவின் மேலும் சென்னியும் மன்னினான்
வந்தென்னுள்ளம் புகுந்து மாலை காலை ஆடுவான்" (118)

எனும் அடிகளால் விளக்குவார்.

[ தொடரும்.... ...

அடிக்குறிப்புகள் :-

107) புறநானூறு 204: 10: 11
108) அகநானூறு 20: 1: 4
109) சபாபதி நாவலர், திராவிடப்பிரகாசிகை, இலக்கியமரபியல் பக்.172
110) டாக்டர் ப. அருணாசலம் மு. கு. நூ. பக். 106
111) மேலது பக். 107 - 108
112) மேலது பக். 109
113) Das Gupta S. N "Hindu mysticism" No. 1959 Preface
114) டாக்டர் ப. அருணாசலம் மு. கு. நூ. பக். 110
115) காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி செய். 20
116) நம்மாழ்வார் பாசுரம் - 04
117) திருஞானசம்பந்தர் திருமுறை செய். 826
118) மேலது 795



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமண மகரிஷிகளின் அன்புக்குரிய லக்ஷ்மி

— திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் —

லக்ஷ்மி என்று இங்கு நான் குறிப்பிடுவது செந்தாமரையில் வீற்றிருக்கும் மகாலக்ஷ்மியை அல்ல, லக்ஷ்மி என்ற பெயர் தாங்கிய பெண்கள், சிறுமிகளையும் அல்ல, ஆனால் திருவண்ணாமலையில் ரமண மகரிஷியினால் அன்பாக வளர்க்கப்பெற்ற பசுவையாகும். இப்பசு சாதாரணமான பசுக்கள் போல் அல்லாமல் மனிதனுக்குரிய உணர்வுகள் பல காணப்பட்டதோடு ரமண பகவானுடைய அன்புக்குப் பாத்திரமாயிருந்தது. ரமண மகரிஷி பறவைகள் மிருகங்கள் எல்லாவற்றுக்கும் அன்புகாட்டுவது போல அப்பசுவைத் தமது திருக் கரங்களால் தடவி, பழங்கள் கொடுத்து அருகிலே படுத்திருப்பதைப் பார்த்து மகிழ்வார். லக்ஷ்மியும் ரமணரிஷியின் ஆச்சிரமத்துக்கு அங்குள்ளவர்களைப்பொருட்படுத்தாது உரிமையோடு சென்று பகவான் முன் வந்து விடும்.

பாலகன் ரமணர் திருவண்ணாமலையில் தவ வாழ்க்கையை ஆரம்பித்த பொழுது குமாரமங்கலத்தைச் சேர்ந்த அருணாசலபிள்ளை என்பவர் ஒரு நாள் ஒரு பசுவையும் கன்றையும் ஆச்சிரமத்துக்குக் கொண்டுவந்து தமது அன்பளிப்பெனக் கூறி பகவானிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றார். லக்ஷ்மிக்குப் பகவானிடம் மிதமிஞ்சிய ஈடுபாடு ஏற்பட்டது. பகவானும் அதே போல லக்ஷ்மியிடம் அன்பு, கருணை, இரக்கமாகத்தமது திருக் கரங்களால் ஊட்டி வளர்த்தார். லக்ஷ்மிக்குச் சுவாமிகளைப் பிரிய விருப்பமில்லாது எந்த நேரமும் அவர் முன் படுத்திருக்கும். ஆச்சிரமத்துக்கு வரும் அடியார்கள், வெளிநாட்டவர்கள் எல்லோரும் லக்ஷ்மியின் நடமாட்டத்தைக் கண்டு வியந்து, அது ஒரு தெய்வப் பிறவி என எண்ணினார்கள். இவ்வாறு பல வருடங்கள் சென்றன. லக்ஷ்மி கன்றுகள் பல ஈன்று ஆச்சிரமத்துக்கு உதவியது. அற்புதமான பல நிகழ்ச்சிகள் லக்ஷ்மியின் வாழ்க்கையில் நிகழ்ந்த காரணத்தால், அடியார்கள் பல விதமான அபிப்பிராயங்கள் கொண்டவரானார்கள். பகவானுடைய ஜெயந்தி தினத்தில் லக்ஷ்மி மூன்று கன்றுகளை ஈன்றாள். பகவான் லக்ஷ்மியுடன் உரையாடி மகிழ்வதுமுண்டு. லக்ஷ்மிக்கு மலை வாழைப்பழத்தில் அதிக விருப்பம் இருந்தது. எனவே பகவான் முன் வந்து நிற்கும் பொழுது சுவாமிகள் அதனைப்

ஆடம்பரச் செலவு ஆளை அடிமையாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து உன்னை போஷிப்பார் மனை வாசற்புறம் இருக்கிறது எனக் கூறி அதனைத் திருப்பிப் படுத்துவார்.

ஆச்சிரமத்திற் பசுக் கூட்டம் அதிகரித்ததும் ஒரு கோசாலை அமைக்க ஒரு கட்டிடத்தைத் தெரிவு செய்தனர். ரமண ஆச்சிரம நிர்வாகிகள். அன்று அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன் லஷ்மி பகவானிடம் சென்றது. நடைபெற விருக்கும் நிகழ்ச்சியை நினைவூட்டுவது போலச் சுவாமிகளைப்பார்த்தது. பின்னர் லஷ்மி முன் நடக்க சுவாமிகள் அதனைத் தொடர்ந்து வர அடிக்கல் நாட்டப்பட்டது. கோசாலைத் திறப்பு விழாவின் பொழுது லஷ்மி; திருநீறு, சந்தனம், குங்குமம் எல்லாம் அணியப் பெற்றுப் பட்டாடை போர்க்கப் பெற்று எல்லாம் தயாரான அந்த சமயம் லஷ்மியைக் காணவில்லை எல்லோரும் லஷ்மியைத் தேடிய பொழுது ரமண மகரிஷியின் முன் அது படுத்திருப்பதைக் கண்டனர். எல்லோரும் அதனைக் கோசாலையடிக்குக் கொண்டு செல்ல எவ்வளவோ முயற்சித்தும் தோல்வியே கண்டனர். ரமணமகரிஷி எழுந்ததும் லஷ்மி எழுந்து அவர் பின் நடந்து சென்று சுவாமிகள் முதலில் செல்ல லஷ்மி அவர் பின் கோசாலைக்குள் சென்றது. சுவாமிகளுடைய அடியார்கள் கூட்டம் அவர் பால் பக்தியும் பணிவும் உள்ளவர்களாய் ஆச்சிரமப் பணிகளை மேற்கொள்பவர்களாக, சதா சுவாமிகளைச் சிந்திப்பவர்களாக விளங்கினார்கள். இவ்வடியார் கூட்டத்தில் லஷ்மியும் ஒரு இடம் பெற்றாள் என்றால் பசுக்களின் மகிமையை எவ்விதம் விளக்குவது! ஆச்சிரமத்துக்கு வரும் அன்பர்கள், அடியார்கள் எல்லோரும் லஷ்மி உரிமையுடன் ஆச்சிரமத்தில் நடமாடுவதையும், சுவாமிகளிடம் நெருங்கிப் பழகுவதையும், ரமண மகரிஷிகள் லஷ்மியிடம் காட்டுகின்ற மிக மிகுந்த அன்பையும், அரவணைப்பையும் அவதானித்து ஏதோ முற்பிறவி தொடர்பு ஒன்று இருக்கிறது எனத் திடமாக நம்பினார்கள்.

காலம் செல்லச் செல்ல லஷ்மி முதிர்ந்த நிலையடைந்தாள். ஆனி மாதம் 1948 ஆம் ஆண்டு லஷ்மிக்கு நோய் ஏற்பட்டது. ஆச்சிரமத்தில் நடமாடிய கால்கள் செயலிழந்தன. சுவாமிகள் பழங்களை ஊட்ட விரும்பித் தின்ற லஷ்மியின் நா அசைய மறுத்து விட்டது. இறுதி நேரம் கிட்டியதும் சுவாமிகள் லஷ்மியிடம் சென்று "அம்மா நான் உனக்கு அருகே இருக்க வேண்டுமா?" என்று வினவியவாறே தனது திருக்கரங்களால் லஷ்மியின் இருதயத்தை வருடி, அதனுடைய உளத்தூய்மையை அறிந்து, சிறிது நேரம் அதனுடைய உடல் நிலையை அவதானித்த பின் ஆச்சிரமத்துக்குத் திரும்பி விட்டார். இவ்வற்புத நிகழ்ச்சியை அவதானித்தவர்கள் ரமண மகரிஷி தனது அருமைத் தாயாருக்கு மோட்சப்

வேறு அருளியது போல வைகாசிக் கும் கொடுத்தார் எனக் கூறினார் கள்.

மயில்கள் மகிழ்ந்து ஆட, குயில்கள் கூவ, கிளிகள் கீ, கீ, என இரம்மியமாக அமைந்த சோலையாகக் காட்சியளிக்கும் ஆச்சிரமத்தின் எல்லையில் பகவானது மேற்பார்வையில் லக்ஷ்மி அடக்கம் செய்யப்பெற்றாள். அதன் சமாதி மீது அதன் வடிவம் கல்லடியில் அமைக்கப்பெற்றது.

(ஸர்வதாரி வருடம் ஆனி மாதம் ஐந்தாம் நாள் வெள்ளிக் கிழமை வளர்பிறைத் துவாதசியும் விசாக நட்சத்திரமும் கூடிய திதி - பசு - லக்ஷ்மி விமுக்தி பெற்றதினம்)

என்ற பொருள்பட பகவான் இயற்றிய ஒரு வெண்பா அச்சமாதியில் பொறிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நான் திருவண்ணாமலைக்குச் சென்ற பொழுது ரமண மகரிஷியின் புனித ஆச்சிரமத்துக்குச் சென்று அங்கு தங்க நேர்ந்தது. அப்பொழுது பசு - லக்ஷ்மியின் சமாதியைக் கண்டதும் பசுவை அன்பாக வளர்த்து, அவளைப் பயன்படுத்திப்பேண வேண்டும் என்ற எனது விருப்பம் மேலும் தூண்டப்பட இக்கட்டுரை எழுதலானேன். சைவ மக்கள் பசுவுக்குப்பாதுகாப்பு வழங்குவதோடு மிக்க அன்பாக வளர்த்துப்பயன் பெறுதல் வேண்டும்.

உழைப்பே இன்பத்தின் அடிப்படை. பலன் கருதாமல் ஏதாவது ஒன்றில் உழைத்துக் கொண்டே இருந்தால் துன்பம் அணுகாது. அதுவே பேரின்ப சாதனம். இடைவிடாத பலன் கருதா உழைப்புக்கு ஆண்டவன் தான் எடுத்துக்காட்டு. தினமும் சூரியனைக் காலையில் எழுப்பி பவனி வரச் செய்கிறான். பருவத்தில் மழையைப் பெய்வித்து உணவை வளர்க்கிறான் புஷ்பங்களை மலரச் செய்கின்றான். நாம் தூங்கும் போது அவன் தூங்குவது இல்லை, எங்கும் எப்போதும் விழிப்புடன் இருந்து கொண்டே பணியாற்றுகிறான். ஓய்வை வெறுக்கும் ஒருவன் புவனத்தில் உண்டென்றால் அது முழுமுதற் கடவுள் தான் அவன் படைப்பாகிய நாம் அவனைப் பின்பற்ற வேண்டாமா?

செருக்கு செல்வத்தைச் சிதறடிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் கந்தபுராணப் புகழ்

# எந்தப் புராணத்திலுமில்லை

— கைலை வ. நடராசா —

இவ்வண்ணத்தைக் கந்தபுராண விமர்சகர் சிலர் "இந்தக் கந்தபுராணப் பொய் எந்தப்புராணத்திலுமில்லை" என்று அதன் கருத்தாழத்தை அறியாது விமர்சனஞ் செய்வர். இவ்விமர்சகர் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லத்தெரியாத ஆய்வாளர். இப்படி மெய்ம்மையைப் பொய்யெனப் புகல இவர்களுக்கு வாய்த்த இடங்களில் தக்ககாண்டம் - வள்ளியம்மை திருமணப்படலமொன்று. இதனை உதாரணமாகக் கொண்டு இவர்கள் கண்டறிந்த நூதனப் பொய்ம்மையின் மெய்ம்மையைக் கண்டு தலைப்பின் பொருத்தத்தைக் காண்போம்.

சிட்டுடைச் சேந்து குமரன் தேவியார் வள்ளிப் பிராட்டியார் "எத்திசையுங் காணும் இதனைத் திருந்து தினைப்புனத்தைக் கிட்ட ஒரு வண்ணக்கிளி ஊதற்புன் ஒட்டுகின்றாள்" [இதனைப் - பாரன்]

அவ்வேளை அப்பிராட்டியாரின் திருமுன்னிலையில் உள்ளங் கவர்கள்வன் கந்தவேட்பெம்மான் நாரத முனிவரின் வாய்ச்சொற் கேட்டுத் தணிகை வெற்பொருவி வருகிறார். வரப்பெற்ற குமரன் பெரும்புனத்திறைவி தன்னைக் கண்டவன், கண்டமாத்திரத்தே எத்திசையுங் காறுபிதனைத் திருந்த குமரியுங்குமரனைக் கண்டனென்பது கூறாதேயமையும். எனவே "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்."

அருமருந்தன்ன சத்திப்பு. நோக்குண்ட மாத்திரையிற் குமாரப்பெருமான் "உலைப்படுமெழுகதென உருகி" ஆராம் மீதூரப் பெற்று ஆட்கொள்ளும் பித்தினால் வேறுவழியின்றிக் காதல் மொழிபேசுகின்றார். பேசி முடிபு காண்பதற்குள்ளேயே பிராட்டியாரின் "ஒரு தனித்தந்தை" நம்பிராசன் ஆங்கு வருகின்றான். ஆங்குதானை தன்னில் வெற்பனைட விரன் கொங்கையிறுருவமாகி வெளிப்பட நிற்கிறான். அத்தில் விய உருவெளித் தோற்றத்தை நானைக்கவொவலாத வனைக்கண் காணுற் கண்ட குன்றிறைவன்

"நம்கைதன் வதனம்பாரா. நறுமலர் வேங்கையொன்று செல்

கூறுவாக்கியவராகத் தனி மனிதன் எவனையும் சுட்டிக் காட்டும் மரபு காட்டப்படவில்லை. அம்மதத்தின் சிறப்புக்கள் அனைத்தும் குரு பாரம்பரியத்துக்கே அர்ப்பணிக்கப் பட்டுள்ளன. இப்பாரம்பரியத்தின் சீரிய பணியாலும், உபதேசங்களினாலும், போதனைகளினாலும் மக்கள் கூட்டத்திலே, எல்லாப் பாமரரும் சமயவுண்மைகளை உணர்ந்து அறிவு பெற வாய்ப்பு ஏற்பட்டது.

தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

என வரும் அடிகளிற் சிவகுருநாதனின் அருளால் எதிலும் தெளிவுண்டாகும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. தாயுமானவர் பசித்திரு, தனித்திரு, விழித்திரு என உபதேசிக்கப் பட்டவர். தாமோ இந்நிலையிலிருந்து சற்று விலகித் தமது நெஞ்சைச் சிஷ்யனாக்கி அதற்குக் குருவாகத் தாமே இருந்து உபதேசம் செய்கின்ற வகையைக் காணக்கூடியதாகவுள்ளது.

பாண்டவர்களின் குருவான துரோணர் அவர்கட்குச் சகல வித்தைகளையும் அஸ்திரப் பிரயோகங்களையும் கற்றுக் கொடுக்கின்றார். ஏகலைவன் என்ற வேடன் தன்னைச் சீடனாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிய போது துரோணர் மறுக்கவே அவரது உருவமொன்றை மண்ணினால் செய்து குருவாக அதனை மதிக்கிறான். குரு பக்திக்கு இது எடுத்துக் காட்டாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேதகால ரிஷி பரம்பரையில் வசிட்டர், விசுவாமித்திரர், வாமதேவர், பரத்துவாசர், அத்திரி ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர். வேத காலத்திலே குருகுல வாசம் இருந்ததாக அறிகிறோம். இருக்கு வேதத்திலே குருவுக்குச் சீடன் ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. வாழ்க்கை முறைக்குரிய நெறி ஒழுங்குகள் பற்றியும், பிரமச்சரியம், பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதர்வ வேதத்திலே மாணவனுடைய நிலை பற்றிய பாடல்கள் காணப்படுகின்றன.

உபநிடதத்திலும் குருத்துவம் பற்றி அறிந்து கொள்ளக் கூடியவைக்குச் சான்றுகள் காணப்படுகின்றன. உயர்ந்த இலட்சியத்தை அடையும் வாழ்க்கை வழிமுறையாக அமையவும், நல்ல ஒழுக்க முள்ள மாணவர்களை உருவாக்கவும், மனிதனை அடிமைப் படுத்தும் தீய எண்ணங்களைப் போக்கவும் குருவினால் வழங்கப்பட்ட கல்வி உதவியது. சுவேதாஸ்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் ஒருவனுக்கு மூன்று வகையான ஆரோக்கிய வாழ்வு கிட்டுகின்றது.

i) மனித வாழ்வு
ii) பரம் பொருளை அறிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பு
iii) சிறந்த நலம் பொருந்திய குரு கிடைப்பது.

இவ்வகையிலே குருவின் சிறப்பு இங்கே உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது எனவே இவ்வாறு ஞானம் கிடைக்கும் வாய்ப்பை நாம் ஆராய்மிடத்துக் குரு பரம்பரையின் சிறப்புப் பற்றி நாம் ஆராய முடிகின்றது. ஆயின் இந்து மரப்பாரம்பரியத்தின் படி நமது குரு பரம்பரையைத் தொடர்பு படுத்தி ஆய்வு செய்யும் போது இறைவனே ஆதி குருவாக இருந்து உயர் ஞானத்தைத் தந்திருக்க வேண்டுமென்பதை உணர முடிகின்றது.

(குருகீதை எனும் நூல் குரு பக்தியினது மகிமையையும் தத்துவத்தையும் எடுத்துக் கூறுகிறது. இது ஸ்கந்த புராணத்தின் பிரம்ம சங்கிதையில் உத்தரகாண்டத்தில் உமாமகேஸ்வர சம்வாத முறையில் மூன்று அத்தியாயங்களாக உள்ளது.)

குரு நாமத்தை ஜபம் செய்தல், குருநாமதீர்த்தம் குரு மூர்த்தியைத் தியானம் செய்தல், குருநாம கீர்த்தனை போன்றவை ஒருவனுடைய அஞ்ஞான இருளை நீக்குவனவாகும். "கு" எனும் எழுத்து இங்கு இருளைக் குறிக்கும் "ரு" எனும் எழுத்து ஒளியைக் குறிக்கும் இதன் மூலம் அஞ்ஞான இருளை நீக்குபவர் குரு என்பது பொருளாகின்றது.

நீண்டகால ஞான பாரம்பரியத்தின் நிகழ்வான வடிவமே குரு இயற்றிக் குரு கீதை விதிவான கருத்துக்களை முன்வைக்கின்றது. குருவைச் சிந்தித்தல் பேசுதல், சேவித்தல், நமஸ்கரித்தல், ஆகியவை உயர்ந்த நெறிகளாகும். குருவே தெய்வம், குருவே தர்மம். குருவிடம் நிலைத்தல் சிறந்த தவமெனக் கருதப்படுகின்றது. இறைவனே ஆதிகுரு என்றும் உயிர்களின் நல்வாழ்விற்காக இறையருளால் தோன்றியவரே குரு எனவும் திருமூலர் கூறிய அரிய கருத்துக்கள் சிந்தனைக்குரியன, குருவே சிவம் என்பது இவரது கருத்து.

இந்து சமய மரபில் தொன்மையான காலம் தொடக்கம் ஆன்மீகச் சிந்தனைகள் குரு பாரம்பரியமாகவே ஒவ்வொரு தலைமுறைக்கும் வழங்கப்பட்டு வந்துள்ளன. எமது குரு பாரம்பரியம் தெய்வீகப் பாரம்பரியமாகும். ஆத்மீகச் சிந்தனையை உலகுக்கு எடுத்துச் செல்லும் இக்குரு பாரம்பரியத்திற்கு ஒரு நீண்ட வரலாற்றுச் சிறப்புண்டு எனவேதான் இந்து சமய மரபிலே அம்மரபினைக்

துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கல்புடைக் கொள்ளப்படின் அவன் செய்தது அறிகிலேன் அன்னாய்” என்றின்னவாறு மெய்ம்மையையே அழுத்தம் திருத்தமாகக் கூறினாளென்க.

இன்னோரன்ன பொய்ம்மையில் மெய்ம்மையைக் கந்தபுராணத்திற் பரக்கக்காணலாம். இஃதொரு தனியழகு.

உலகத்தில் உள்ள எல்லோரும் ஒரே மாதிரி இருப்பதில்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரி உருவமோ, நிறமோ, திறமையோ இருப்பதில்லை. எல்லாப்படைப்புக்களும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஆகையால் வெவ்வேறு மதம், சாதி இனம் இவை இருப்பதால் ஒற்றுமை பாதிக்கப்பட்டு விடாது. ஆனால் அவை ஒன்றுக்கொன்று விரோதம் காட்டி, சண்டையிலும் பூசலிலும் ஈடுபடும்போது தான் சமூகம் பாதிக்கப்படுகிறது. நமது உடம்பையே எடுத்துக் கொள்வோம். தலை உயரே இருக்கிறது. கால் கீழே இருக்கிறது. மூளை சிந்திக்கிறது. கை உழைக்கிறது. கண் வழி காட்டுகிறது. கால் பின்பற்றுகிறது. இதனால் ஒன்று உயர்ந்தது என்றோ இன்னொன்று தாழ்ந்தது என்றோ ஆகிவிடுமா? இவற்றைத் தனித்தனியே விலக்கி விட்டாலோ, அல்லது எல்லாம் ஒரே மாதிரியாகத் தான் இருக்க வேண்டும் என்றும் செயற்பட வேண்டும் என்றும் கூறி விட்டாலோ, உடல் எப்படிச்சரிவர இயங்க முடியும்? எல்லாவகை உறுப்புக்களும் சேர்ந்து இருப்பதுதான் உடல். அவை ஒற்றுமையாக இயங்குவதே நம்முடைய திறமை. அதேபோல எல்லா வகையினரும் சமூகத்தில் இருப்பதே நாட்டின் அமைப்பு. அவர்கள் ஒற்றுமையாகச் செயற்படுவதே அதற்கு முன்னேற்றம். எல்லா உறுப்புக்களின் வழியாகவும் ஒரே இரத்தம் தான் ஓடுகிறது. அதே போல எல்லாப் பிரிவினரின் மூலமாகவும் நல்ல எண்ணங்களும், நல்ல பேச்சும், நல்ல செய்கைகளும் இடம்பெற வேண்டும். அப்போது நல்ல இரத்தம் ஓடும் உடம்பைப்போல, நாடும் ஆரோக்கியமும் பலமும் பெறும்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா.

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனற்ற பேச்சுப் பலன் தாராது

— சந்நிதியான் ஆச்சிரமம் —

உலகத்திற் செயற்கரிய செயல் செய்த பெரியோர்கள் பலரும் சில சொற்கள் சொல்வதிலேயே பயன் கண்டார்கள். ஆகையால், பயனில்லாத பல சொற்கள் சொல்வது பண்படாத மனத்தின் அடையாளமாகும். அத்தக்குறையை நாம் நம்மிடமிருந்து நீக்க வேண்டும்.

எல்லோரும் பேசுவதற்கு விரும்புகிறார்கள். ஆனால் எதைப் பேசுவது? எப்படிப் பேசுவது? யாரிடம் பேசுவது? என்றெல்லாம் சரியாகச் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உண்டு. அதை நாம் சரியாகப் பாவிக்கின்றோமா என்றால் இல்லை.

" சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். "

என்னும் குறளில்; சொல் எனும் சொல் ஐந்து இடங்களில் வருகிறது. எனவே சொல்லின் சிறப்பை அறிந்து நாம் பயனுடைய சில சொற்களை பேச வேண்டும்.

பல மணி நேரம் தேவையற்ற விஷயங்களைப் பேசுவதை நிறுத்தினாற் சிந்தனையில் தெளிவு பிறக்கும். எதையும் சில சொற்களிற் சொல்லும், ஆற்றல் மலரும். நாம் பெற்ற நன்மையைப் பிறரும் பெறும் படி சிறந்த மனத்தோடு வழி காட்டுவது பயனுடைய செயலாகும்.

வாய்ச்சொற்கள் மனத்தின் நிலையைக் காட்ட வல்லவை. நெஞ்சில் தரும சிந்தனையும், நிறை சிந்தனையும் இருந்தால் பயனில்லாத எண்ணங்கள் தோன்றா. அந்தச் சிந்தனைகளின் விளைவாகப் பயனில்லாத சொற்களைப் பேசுவதும் இயலாது அவ்விதமின்றி ஒருவன் பேசும் பயனில்லாத சொற்கள், அவன் அறிவில்லாதவன் என்பதையும், வெறும் பகட்டிற்காகப் பேசுகின்றான் என்பதையும் வெளிப்படையாகக் காட்டி விடும்.

கபடமற்ற தர்மமே துணை புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரிடம் நாம் பேசும் பேச்சானது, நல்லறிவை ஊட்டும் பேச்சாகவும், மற்றவர்களின் கருத்தைக் கவர்ந்திழுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். நாம் ஒன்றைச் சொல்வதானால் தெரிந்து சொல்ல வேண்டும். தெரியா விட்டால் மற்றவன் சொல்வதைக் கேட்க வேண்டும்.

பொருள்களைச் சரியாக உணர்ந்த அறிவு, பிறருக்குச் சொல்லும் விருப்பம் தோன்றும் போது சொல்லாக வெளிப்பட்டுப் பரவுகிறது. இது பயனுடைய நற்சொல்லாகும். வாழ்க்கையில் நீங்கள் வெற்றி பெற வேண்டுமானால் பிறருக்குப் பயன்படும் வகையிற் பேசுக. பயனற்றவைகளை என்றும் பேசுவதில்லை என்று முடிவு செய்து அதன்படி ஒழுக வேண்டும்.

பயனில்லாத சொற்களைப் பேசாமல், பொருளுணர்ந்து, நெறி உணர்ந்து, அறநிலை வழுவாமற் சில சொற்களையே பேசும் பழக்கத்தை நாம் கைக்கொள்வது சாலச் சிறந்தது.

சிந்தனைக்கு .......

கடைசியாகப் போர்க்களத்தில் இராமனைச் சந்திக்கும் போது மிக அருகாமையில் வந்து பார்க்கும் பேறு இராவணனுக்குக் கிடைக்கிறது. அப்போது அவன் உள்ளத்தில் ஒரே ஒரு கணம் பக்தி தோன்றுகிறது. இராமனை வேத முதல்வன் என்றே எண்ணுகின்றான். அந்த ஒரு கண பக்திக்கு அவனுக்கு எள்ளும் தண்ணீரும் விட விபீடணன் மிஞ்சி நிற்கின்றான். கந்தபுராணத்தில் முருகனை அவ்வாறு தரிசிக்கும் சூரபத்மனோ பல இடங்களில் மெய்ம்மறந்து பக்தி மயமாக நிற்கின்றான். அதனால் அவன் மயிலாகவும், சேவலாகவும் மாறி முருகனுக்கு வாகனமாகவும் கொடியாகவும் அமைந்து விடும் பேறு கிடைக்கின்றது. துரியோதனனுக்குக் கண்ணன் சபையில் விஸ்வரூப தரிசனத்தைக் காட்டிய போதும் கண்ணனின் பெருமையை உணராமல் அகந்தையுடன் அலட்சியப்படுத்தியதன் விளைவு அவனுக்கு எள்ளும் தண்ணீரும் விடக்கூட யாரும் மிஞ்சவில்லை. கடவுளை ஒரு கணமேனும் பக்தியுடன் நினைத்தாலும் கூட, நமக்கு நற்பேறுகள் கிட்டிவிடும்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையுணர்வின் இன்ப ரகசியங்கள்

யாழ். வதிரி வாசகன்

சடப்பொருட்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த உலகமொரு வெறும் மாயை. மாயை என்றால் என்ன? கற்பனைக்கும் எட்டாத கற்பனை தான் மாயை. கற்பனைக்கும் மாயைக்கும் வித்தியாசமுண்டு. கற்பனை என்பது இல்லாத ஒரு பொருளுக்கு இருப்பது போல் உருவம் கொடுத்து எமது மனக்கண்முன் நிறுத்திப் பார்த்தல். ஆனால், மாயை என்பது கற்பனை செய்து உருவம் கொடுத்துப் பார்க்க முடியாதளவுக்கு ஒரு விசித்திரமான சூனியப் பொருள். கற்பனை - Imagination. மாயை- Illusion.

இந்த மாயையைத்தான் இந்து மத ஞானிகள் பிரம்மம் என்று அழைக்கிறார்கள். இந்தப் பிரம்ம சொரூபமாக அமைந்தவன் தான் இறைவன். இறைவனை ஆங்கிலத்திலே God என்று அழைப்பார்கள். "God" என்ற இச்சொல்லானது மிகவும் ஆழ்ந்த அர்த்தமுடைய ஒரு சொல்லாகும். இங்கு G - Generator (படைப்பவர்) O - Operator (இயக்குபவர்) D - Destroyer (அழிப்பவர்) இந்த மூன்று செயல்களையும் செய்பவர் தான் God என்று அழைக்கப்படும் இறைவன்.

இந்த இறைவன் பிரம்ம சொரூபமானவன். இந்தப் பிரம்மத்தை ஒரு சிறு உதாரணத்தின் மூலம் விளக்கலாம். இருட்டிலே கயிற்றுத் துண்டைப் பார்த்து நாம் பாம்பு என்று நினைக்கிறோம். அதாவது இல்லாத ஒன்றை நாம் இருப்பதாகக் கற்பனை செய்து பயமடைகின்றோம். இந்தத் தடுமாற்றத்துக்குக் காரணம் இருள். அது போலத்தான் இந்த உலகமும் அதிலுள்ள சடப்பொருட்களும் ஜீவராசிகளும். இல்லாத ஒன்றைப் பார்த்து இருப்பது போல நாம் கற்பனை செய்கின்றோம். இந்தத் தடுமாற்றத்துக்கும் காரணம் அஞ்ஞான இருள் அதாவது அறியாமை இருள் (Darkness of Ignorance) இந்த அஞ்ஞான இருளிலிருந்து எம்மை விடுவித்து மெய்ஞ்ஞான வெளிச்சத்துக்கு வந்து விட்டோமேயானால் அனைத்தும் மாயை என்பது தெளிவாக விளங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரசு கண்ணதாசனே மிகவும் அழகாகச் சொல்லுகின்றார் ''இல்லாத மேடையொன்றில் எழுதாத நாடகத்தை எல்லோரும் நடிக்கின்றோம், நாம் எல்லோரும் பார்க்கின்றோம்.''

இந்தப் பிரம்மத்தை உணர்ந்த பிரம்மஞானிகள் பலர் எமது இந்து மதத்தில் உள்ளனர். இந்தப் பிரம்மத்தின் இயல்புகளாவன.

1) நித்தியமானது - Eternal
2) தொடக்கமற்றது - Beginningless
3) முடிபற்றது - Endless
4) மாற்றமற்றது - Changeless
5) மரணமற்றது - Deathless
6) பிறப்பற்றது - Birthless
7) பயமற்றது - Fearless
8) அப்பழுக்கற்றது - Spotless
9) குணங்குறியற்றது - Attributeless
10) பெயரும் உருவமும் வடிவமுமற்றது - Nameless, Formless and Shapeless.

இந்தப் பிரம்மத்தின் சின்னம் தான் ''ஓம்'' என்ற மந்திரம். எந்த ஒரு மந்திரமும் ''ஓம்'' என்ற ஓங்கார உச்சாடனத்துடனேயே ஆரம்பமாகிறது. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் இந்த ஓங்காரத்துள் அடக்கம். ''அண்டமெல்லாம் உந்தன் ஓங்காரத்துள் அடக்கம், அடியவர் உள்ளமதில் அன்னையே நீயடக்கம்'' என்று வதிரியூர்க் கவிஞர் மா. கிருஷ்ணகாந்தன் அவர்கள் விநாயகப் பெருமானைப் பார்த்துப் பாடுகிறார்.

இந்த ''ஓம்'' என்பதே எமது ஆன்மாவின் துடிப்பு, எமது உள்ளத்தின் துடிப்பு. ''உள்ளம் துடிப்பதை உற்றுக்கேளுங்கள் ஓம் ஓம் என்றொரு நாதவரும், இந்த உண்மையை உணர்ந்தால் மனிதர்கள் நெஞ்சில் முருகன் மீது ஆசை வரும்'' என்று டி. எம். சௌந்தரராஜன் பக்திப்பாடல் ஒன்றில் மிகவும் அழகாக இசைக்கிறார்.

இந்த ''ஓம்'' என்ற மந்திரத்தின் உட்பொருளிற்றான் இப்பிரபஞ்சம் இயங்குகிறது. இந்த ஓங்காரம்தான் பிரபஞ்ச இயக்கத்தின் உயிர்மூச்சு. பிரளய காலத்தில் இந்த ஓங்காரத்துள்ளேதான் இவ்வுலகம் அழிந்து அடங்கி ஒடுங்கும். இந்த ஓங்காரத்தின் உட்பொருளானது எமது சக்திக்கும் புத்திக்கும் எட்டாதது. இடைவிடாத தெய்வபக்திக்கு மட்டுமே இது எட்டும்.

நான்கு வேதங்களின் சாரம் சமும் இந்த ஓங்காரம்தான். ஞான

மிகவும் கெட்டவன் சுயநலக்காரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகத்தின் மூலம் தான் இந்த ஓங்காரத்தின் உட்பொருளை நாம் உணரமுடியும். இந்த ஞான யோகத்தை அடைவதற்கு இடைவிடாத இயமப்பயிற்சி அவசியம். மனத்தையும் புலன்களையும் ஒரு நிலைப்படுத்தி இந்த ஓங்காரத்தை நாம் திரும்பத் திரும்ப உச்சரிக்க வேண்டும். இதன் மூலம் உலகியல் வாழ்வின் சகல வேதனைகளும் எம்மைவிட்டு நீங்கிவிடும். இந்த மாயாவுலகில் எந்தத் துன்பமும் எம்மை நெருங்காது. தியானத்தினால் நாம் தன்னுணர்வை ( Self Realisation ) அடையலாம். இத்தன்னுணர்வை அடைவதற்கான தடைக்கற்களாவன

1) மிதமிஞ்சிய தூக்கம்
2) மனப்போராட்டம்
3) தாழ்வு மனப்பான்மை
4) மனக்கோட்டை கட்டுதல்
5) பேராசை
6) நோய்
7) மண், பெண், பொன் ஆசை
8) பிறரின் விருப்பம்
9) காமம்
10) குரோதம் போன்றவையாகும்.

தன்னுணர்வை அடைந்த ஒரு ஞானி தன்னுள்ளே எல்லாப் பொருட்களையும் காண்கின்றான். எல்லாப் பொருட்களிலும் தன்னைக் காண்கின்றான். அனைத்தும் பிரம்மமாகவே அவனுக்குத் தோன்றும். பிரம்மத்தைத் தவிர வேறெதுவும் அவனுக்குத் தென்படாது. அவனுக்கு இன்ப துன்பங்கள் இல்லை. அவன் ஜீவன்முக்தி என்ற பேரின்ப நிலையை அடையலாம். முக்கால நிகழ்வுகளையும் அறியலாம். ஆசையற்ற, பற்றற்ற நோய்நொடியற்ற நிலையை அவன் அடையலாம். எதிரும் புதிருமான எந்த நிகழ்வுகளையும் சரிசமனாக நோக்கலாம். தளராமனம் பெறலாம். பிறப்பையும் இறப்பையும் சரிசமனாய் நோக்கலாம். கட்டுப்பாட்டையும் சுதந்திரத்தையும் சரிசமனாய் நோக்கலாம். இதுவே பரிபூரணமான உண்மை.

" அவனின்றி ஓர் அணுவும் அசையாது "
Not even a tip of grass moves
Without " His Will "

கஷ்டப்படும் போது இறைவனை நினைத்து விட்டு சுகப்படும் போது அவரை மறக்கும் குணத்தை ஒழித்து, எப்போதும் ஆண்டவனைச் சிந்தித்துப் பூஜித்தால் காந்தம் இரும்பை இழுப்பது போல் இறைவனே வந்து நம்மை அழைத்துக்கொள்வான்.

உண்மையும் ஊக்கமும் உழைப்பு உயர்வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

(மகாபாரதத்திலிருந்து)

# இராஜசூய யாகம்

சிவத்திரு. வ. குமாரசாமிஐயர்

இராஜசூயப் பெரு வேள்வி செய்வதற்குரிய ஆலோசனைகளைக் கண்ணபிரானுடன் நடாத்தலாயினர் பஞ்ச பாண்டவர்கள். அவர்களுடன் பீஷ்மர், விதுரர், விராடன் முதலனோரும் யாகம் செய்வதற்கான சாதக, பாதக விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடினர். அனைவரும் தருமர் இராஜசூயப் பெரு வேள்வி செய்யத் தகுந்த வல்லமை பெற்றவன் என எடுத்துரை செய்தனர். ஆயினும் கண்ணபிரான் நிறைவாக ஒப்புதல் அளித்துப் பேசாது, யாகம் செய்வதில் உள்ள ஓர் இடர்ப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தார். "பாண்டு குலச் செம்மலே, இராஜசூயப் பெரு வேள்வி செய்வதற்கான தகுதிகள் யாவும் உன்னிடம் நிறைந்துள்ளன. ஆயினும் நன்றாகச் சிந்தித்து நாம் செயலில் இறங்க வேண்டியவர்களாக உள்ளோம். ஏனெனில், இவ்வேள்வியைச் செய்பவன் மன்னர்க்கு மன்னனாக, பேரரசராக விளங்க வேண்டும். இத்தகுதியை ஒன்றினை பெற்றுக்கொண்டு நாலா திசைகளிலும் வாழும் மன்னர்கள் பலரையும் வென்று வாகை சூடியவனாக இருக்க வேண்டும். பேரரசர் குல மன்னர்கள் முன்பு பேரரசராக விளங்கினர். ஆனால், இப்போது அவர்கள் எல்லோரையும் வென்று வாகை சூடியவனாக ஜராசந்தன் என்னும் மன்னன் விளங்குகிறான். அவனுடன் நானும் பலராமனும் மூன்று ஆண்டுகள் போர் புரிந்து அவனை வெல்ல முடியாது திரும்பி விட்டோம். அவன் சார்பாகச் சிசுபாலன், வக்ரன், பகதத்தன் முதலானோர் இருக்கிறார்கள். இந்நிலையில் அவனை வெற்றி கொள்ளாது இவ்வேள்வியை நீங்கள் செய்ய முடியாது. ஆனால், அவனோ மிகவும் பலம் வாய்ந்த

சினம்போல் பகைவர் இவ்வுலகில் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன். வெல்ல முடியாதவனுமாக இருக்கிறான். எனவே, நன்கு ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்" என்று கண்ணபிரான் எடுத்தியம்பினார்.

கண்ணபிரானின் உரைகளைச் செவிமடுத்த அனைவரும் மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்தனர். சிறிது நேரத்தின் பின் தருமர் "கண்ணா உம்மால் வெல்வதற்கரிதாக இருக்கிற ஜராசந்தனை அர்ச்சுனனும் பீமனும் வெல்ல முடியுமா? என்னாற்றான் முடியுமா. எனவே, வேள்வி செய்வதற்கான ஆலோசனையைக் கைவிட எண்ணுகிறேன்" என்றார். இவ்வாறு தருமர் கூறியதைத் தொடர்ந்து பீமன் எழுந்து "மன்னன் என்பவன் எதிரிகளைக்கண்டு அஞ்சுதல் கூடாது. முயற்சி செய்பவனே சிறந்த மன்னனாகத் திகழ்வான். கண்ணபிரானிடம் மதிநுட்பம் இருக்கிறது. என்னிடம் பலம் இருக்கிறது. அர்ச்சுனனிடம் திறமை இருக்கிறது. எனவே, நாம் மூவரும் சேர்ந்து ஜராசந்தனை வெற்றி கொள்வோம்" என்று பகர்ந்து நின்றான்.

பீமனின் உரைகளைச் செவிமடுத்த கண்ணபிரான் "ஜராசந்தன் மிகவும் பராக்கிரமம் உடையவன். எண்பத்தாறு மன்னர்களைப் பிடித்துச் சிறை வைத்துள்ளான். அத்துடன் இன்னும் பதினான்கு மன்னர்களைப் பிடித்துப் பின் நரமேதயாகம் செய்ய முனைகிறான். அவனை இந்நிலையில் வெற்றி கொள்பவர்கள் உண்மையிற் பேரா சக்தரே!" என்று மொழிந்தனர்.

அப்போது தருமர் கண்ணபிரானை நோக்கி "கண்ணா, சக்கரவர்த்தியாகும் ஆவலினால் உங்கள் மூவரையும் ஜராசந்தனுக்குப் பலியாக்க நான் விரும்பவில்லை. கண்ணபிரானே தாங்கள் எனக்கு உள்ளம் போன்றவர். பீமனும் அர்ச்சுனனும் என் இரு கண்கள் போன்றவர்கள். உள்ளமின்றி ஒருவனால் வாழமுடியுமா? கண்கள் இன்றி ஒருவனால் எப்படி வாழ முடியும்! எனவே, நான் வேள்வி செய்வதற்கான சிந்தனையையே விட்டு விடுகிறேன்" என்றார்.

இவற்றை எல்லாம் செவிமடுத்திருந்தும் மௌனமாகவிருந்த அர்ச்சுனன் அவ்வேளையில்த் தருமரை நோக்கி "மன்னா சிறந்த வீரமும் ஆற்றலும் திறமையும் மிக்கவர்கள் நாங்கள். அதிபராக்கிரமமுடையவர்களின் குலத்திலே வந்து தோன்றிய நாம் அஞ்சுதல் அறமா? அமைதியுற்று ஒதுங்கியிருத்தல் விவேகமானதா? தாங்கள் செய்யப் புகுந்த வேள்விக்குத் தடையாக இருப்பவர் அனைவரையும் நாம் எதிர்த்து வெற்றி கொள்வோம்" என்று தன்னம்பிக்கை மிக்க உரைகளை உரைத்தான்.

அர்ச்சுனனின் உற்சாகமான உரைகளைச் செவிமடுத்த கண்ணபிரான் "அர்ச்சுனனின் உரைகள் பரத குலத்துதித்த வீரர்க்குரிய

காரியத்தில் உறுதியாக இருப்பது தான் வெற்றியின் இரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீர வாசகங்களாலும், யுதிஷ்டிரா, மரணம் என்பது ஒருவருக்கு எப்போது சம்பவிக்கும் என்பதை யாராலும் நிர்ணயிக்க முடியாது. போர் புரியாது இருப்பதனால் மரணத்தின் பிடியிலிருந்து தப்பி விடலாம் என்பதும் இல்லை. எனவே தந்திரோபாயங்களைக் கையாண்டு ஒருவன் யுத்தம் செய்யும்போது மரணத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். வெற்றி, தோல்வி என்பதும் நிர்மாணிக்க முடியாதது இல்லை. புகழையும் கீர்த்தியையும் அடைய விரும்பும் மன்னன் முயற்சிகள் உடையவனாக இருத்தல் அவசியம். எனவே, நாம் ஜராசந்தனுடன் போர் புரிந்து அவனை அழிக்கும் முயற்சியில் செயற்படுவதே சிறந்ததாகும்'' என்று புகலலானார்.

அர்ச்சுனனின் உரை சரியானது எனக் கண்ணபிரான் உரைத்தமையால் யுதிஷ்டிரனும் மனத்தில் இடம் கொண்டவனாய் ஜராசந்தனை அழிப்பது என முடிவு செய்தான். எனவே ஜராசந்தனின் வரலாறு, அவனின் வலிமை, என்பவற்றை அறிந்து அதற்கமையச் செயற்பட முடிவு செய்தவனாய் அவனைப்பற்றிய விபரங்களைக் கேட்டறிய முயன்றான்.

## ஜராசந்தன் வரலாறு

யுதிஷ்டிரர் கேட்டதற்கமையக் கண்ணபிரான் ஜராசந்தனின் வரலாற்றினைக் கூறலானார். மகத நாட்டை ஆண்டுவந்த பிரகத்திரன் என்னும் மன்னன் காசியம்பதியின் மன்னனின் புதல்வியர்களாக இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்த இரு பெண்களையும் மணந்து வாழ்ந்து வந்தான். பல ஆண்டுகள் கடந்தும் அவனுக்குப் புத்திரப் பாக்கியம் கிடைக்கவில்லை. எனவே, அவன் பெரும் தவசீலர்களை நாடி அவர்களின் திருவருட் கடாட்சத்தினாற் புத்திரப் பேற்றைப் பெற்றுக் கொள்ள விரும்பினான். இதனால், அவன் நாட்டைவிட்டுத் தன் இரு மனைவியருடனும் கானகம் நோக்கிச் சென்றான். கௌசிக முனிவரைச் சந்தித்துத் தனது மனக்குறையை எடுத்துரைத்தான். முனிவரும் அவன்பால் கருணை கொண்டு தியானமூலம் மாங்கனி ஒன்றைப் பெற்று அவனுக்குக் கொடுத்து ''அக்கனியைப் புசிப்பதன் மூலம் உனக்குப் புத்திரப் பாக்கியம் கிட்டும். எனவே, நாட்டுக்குத் திரும்பிச் சென்று மகிழ்வுடன் ஆட்சியைக் கவனித்து நடாத்துவாயாக'' என்று அவனை ஆசீர்வதித்து அனுப்பிவைத்தார்.

மாங்கனியைப் பெற்ற மகிழ்வுடன் அக்கனியைத் தனது இரு மனைவியருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுத்து நாடு திரும்பினான். தகுந்த காலம் வந்ததும் இரு மனைவியரும் குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். ஆனால், அக்குழந்தைகள் விசித்திரமான முறையிற் பிறந்தன. அதாவது ஒரு குழந்தை ஒரு பாதியாகவும், மற்றைக் குழந்தை ஒரு பாதியாகவும் இருந்தன. இரு பெண்களின் குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும் ஒன்றுசேருமிடத்தில் ஒரு குழந்தை உருவாகக் கூடியவகையில் அக்குழந்தைகள் இருந்தன. அதனைப் பார்த்துப் பயமுற்ற மனைவியர் இருவரும் இருபாதிக் குழந்தைகளையும் மன்னனுக்குத் தெரியாத வகையில் நகரின் மத்தியிற்போடச் செய்து வாளாவிருந்தனர்.

அவ்வேளையில் அவ்விடத்தை அடைந்த "ஜரை" என்னும் தேவதை இரு கூறுகளாக இருந்த குழந்தைகளை ஒன்றுபடுத்தி அழகிய குழந்தையாக்கி மன்னனிடம் ஒப்படைத்தது. "ஜரை" என்னும் தேவதையை மன்னன் பூசித்ததனால் மகிழ்வுற்ற ஜரை அவ்வாறு செய்தது. ஜரையால் ஒன்று சேர்க்கப்பட்டு உருவாகிய குழந்தை ஆதலால் அக்குழந்தைக்கு ஜராசந்தன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தான் மன்னவன்.

குழந்தை பிறந்த செய்தியையும் நடந்த சம்பவங்களையும் அறிந்த கௌசிகமுனிவர் பிரகத்திர மன்னனைச் சந்தித்து "மன்னா நின் புதல்வன் பெரும் கீர்த்தியுடையவனாய் விளங்குவான். மன்னர்க்கு மன்னன் என்னும் பெரும்பெயர் பெற்றுத்திகழ்வான்" எனக்கூறிக் குழந்தையை ஆசீர்வதித்துக் கானகம் புக்கார். காலப்போக்கில் ஜராசந்தன் பெரும் மன்னனாகத் திகழ்ந்தான் பேராற்றலோடு விளங்கலானான். இதுவே அவனது வரலாறு என்று கண்ணபிரான் உரைத்தார்.

(தொடரும்)

## எது சிறந்த பலம்

இவ்வுலகில் வாழ்கின்ற மனிதனுக்கு உடற்பலம், மனப்பலம் என்பவை எல்லாம் அவசியமென்று நாம் கூறுகின்றோம். ஆனாலும் இவற்றைவிட ஆன்மபலந்தான் மிகவும் அவசியமானது. ஏனென்றால் ஒருவனிடம் இருக்கின்ற உடற்பலம் சிலவேளைகளில் மிருகபலமாக மாறி சில தீங்குகளைக்கூட ஏற்படுத்தலாம். அதே போல பக்குவமில்லாத மனப்பலத்தினால் சில தீமைகள் கூட ஏற்படலாம். ஆனால் ஆன்மபலம் என்பது உடற்பலத்தையும், மனப்பலத்தையும் பக்குவப்படுத்தி சரியான பாதைக்கு இட்டுச் செல்வதற்கு மட்டுமன்றி எமது வாழ்க்கையில் இம்மைக்கும், மறுமைக்கும் கூட பயன்படுகின்ற சிறப்புத் தன்மை பொருந்தியதாகக் காணப்படுகின்றது.

உற்சவகாலச் சிறப்பு நிகழ்வில்
சிவ பாலலிங்கம் அவர்கள்.


மானிட வாழ்க்கையில் பழக்கமே பெரிய வழிகாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான்

[ புரட்டாதி மாத தொடர்ச்சி ... ]

■ ந. அம்பரத்தினம் ■



சந்நிதியானை வழிபடுகின்ற பொழுது ஒரு நண்பனுடன் செல்லுகின்ற உறவைப்போன்று உரிமையுடனும் அதிகாரத்துடனும் வழிபடுகின்ற வன்றொண்டனான திரு. S. துரைராஜா அவர்கள் பபா சுவாமிகள் என அழைக்கப்படும் திரு. க. அருட்செல்வம் அவர்களின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து அவரின் பாதங்களைப்பற்றிய காட்சியும் பக்தி நிலையில் காணப்பட்டது உண்மையில் எல்லோருக்கும் வியப்பை அளிக்கத் தான் செய்தது.

இறுதியில் ஒருவாறு பபா சுவாமிகள் திரு. துரைராஜா அவர்களைத் தேற்றி தனது அன்பையும், ஆசீர்வாதத்தையும் துரைராஜா அவர்கள் மேல் செலுத்தி அவரை இயல்பு நிலைக்குக் கொண்டு வரு

அன்பு நீர் வார்த்தால் அருள் தோன்றி மலரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு முயற்சித்தார்கள். ஒருவாறு பக்தி தாம்பும் அந்த உணர்ச்சி நிலையிலிருந்து விடுபட்ட திரு. துரைராஜா அவர்கள் இரவு கனவிலேதான் கண்ட காட்சியையும் ஒரு நண்பனைப்போலத் தனக்கு சந்நிதியான் இடித்துக் கூறிய வார்த்தைகளையும் உள்ளம் நெகிழ பபா சுவாமிகளுக்கு எடுத்துக் கூறினார்கள்.

> " அன்று இரவு அதிகாலை 3 மணியளவில் சந்நிதியான் பபா சுவாமிகளின் வடிவில் தோன்றி திரு. துரைராஜா அவர்களின் நெஞ்சிலே அடித்து சும்மா கொட்டா தகம் வரும் சும்மா கொட்டா தகம் வரும் "

என்று கட்டளையிடுவது போல இடித்துக்கூறியுள்ளார்கள். அதன் பின்பே சந்நிதியானுடைய இடத்தில் அதுவும் உற்சவ காலத்தில் தான் விட்ட தவறை திரு. துரைராஜா அவர்கள் உணர முற்பட்டார்கள்

திரு. துரைராஜா அவர்கள் நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒரு வித்தியாசமான இயல்புள்ளவர் மட்டுமல்ல முற்போக்கான சிந்தனையுமுள்ளவர். மதம் என்று கூறும் பொழுது அது தனியே வழிபாடு செய்வதாக மட்டும் இருக்கக்கூடாது ஒருவன் வாழுகின்ற பொழுதே மத தர்மத்துடன் வாழ வேண்டுமென்று நினைக்கின்றவர். இந்த வகையில் ஆலயம் என்பது பக்திக்குரிய இடமாக இருக்க வேண்டுமே தவிர அங்கே வியாபாரம் இருக்கக் கூடாது, ஆடம்பரம் இருக்கக் கூடாது. என்று ஏனையவர்களுக்கு அறிவுரை கூறுகின்றவர். இவ்வாறு அறிவுரை கூறுகின்ற அன்பர் தாய்மையானதும் பக்தி உணர்வை ஏற்படுத்தக் கூடியதுமான தசாங்கம் அடியார்களுக்கு கிடைக்க வேண்டுமென்று நினைத்துச்செயற்பட முற்பட்டவர் இறுதியில் ஆலயச் சூழலில் அதனை ஒரு வியாபாரப் பொருளைப் போல சந்தைப்படுத்தும் செயற்பாட்டில் தன்னை அறியாமலே ஈடுபடத் தொடங்கி விட்டார். இது அவருடைய கொள்கைக்கும் சிந்தனைக்கும் முரண்பட்ட செயற்பாடு அல்லவா? இது போன்ற ஒரு தவறை நாம் எமது நண்பனுக்குச் செய்தால் அவன் சும்மா இருப்பானா? அதனால் தான் போலும் நண்பனைப்போல் உரிமையுடன் வழிபடுகின்ற சந்நிதியானும் திரு. துரைராஜா அவர்களின் நெஞ்சினிலே அடித்து தசாங்கத்தினை சும்மா கொட்டா என்று கூறி அவர் விட்ட தவறினை எடுத்துக் காட்டியுள்ளார்.

மேற்படி சந்நிதியானுடைய அற்புத நிகழ்வினை உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அடியேனைச் சந்தித்த பொழுது உள்ளம் உருக எடுத்துக்கூறினார்கள். மேலும் திரு. துரைராஜா அவர்கள் தனக்கு வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத இடைஞ்சல்கள் துன்பங்கள் ஏற்படும் பொழுதுதான் எவ்வாறு சந்நிதியானிடம் சென்று உரிமையுடன் வழிபடுவேனோ அதே போல சந்நிதியானும் பாபா சுவாமிகளின் உருவத்தில் வந்து தனது தவறை சுட்டிக் காட்டி, தனக்கு படிப்பினையை ஏற்படுத்தி இறுதியில் தன்னையும் ஒரு அடியானாக ஆட்கொண்டு விட்டதை உணர்ச்சி பொங்க எடுத்துக் கூறினார்கள்.

இந்த சம்பவத்தைத்தொடர்ந்து திரு. துரைராஜா அவர்கள் ஆலயச் சூழலிலே வியாபார ஸ்தாபனங்கள் மூலம் தசாங்கத்தினை விற்பனை செய்வதை உடனடியாக நிறுத்தி உண்மையான பக்தி உணர்வுடன் உற்சவகாலத்தில் சந்நிதியானிடம் வருகை தந்த பல அன்பர்களுக்கு அவற்றை தானாகவே தேடிச்சென்று இலவசமாக வழங்கும் பணியில் ஈடுபடத்தொடங்கி விட்டார்கள்.

அது மட்டுமன்றி ஏற்கனவே தசாங்க உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த திரு. துரைராஜா அவர்களுக்கு பத்தாம் திருவிழாவின் பொழுது ஒரு யோசனை தோன்றியது. அதாவது தசாங்க உற்பத்தியின் பொழுது உருதுகின்றவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு பெரிய தசாங்கமாக்கி சந்நிதியானின் மூலஸ்தானத்தில் அதனை ஏற்ற வேண்டுமென்பதே அந்த யோசனையாகும்.

எனவே அதிசயம் அதன் பின்பு அவர் அச்சில் இட்டு உருவமைக்க முயற்சிக்கும் பொழுது உருவமைக்கப்படுகின்ற தசாங்கங்களின் எண்ணிக்கையை விட உருதுகின்றவற்றின் எண்ணிக்கையே அதிகமாகச் சேரத் தொடங்கியது.

அணைக்கட்டை கட்டுவதற்கு செம்மனச் செல்வியிடம் வந்து முழுமுதற்கடவுளான சிவபெருமான் உருதுகின்ற பிட்டு எல்லாம் தனக்கு என்று கூறி அணைக் கட்டை கட்டுகின்ற வேலையை ஆரம்பித்த பொழுது செம்மனச் செல்வி அவித்த பிட்டுக்களில் அதிகமானவை உருத ஆரம்பித்தது போல இங்கேயும் உருதுகின்ற தசாங்கங்களின் அளவே அதிகமாகக் காணப்படுகின்ற அதிசயத்தையும் சந்நிதியான் ஏற்படுத்தினார். முடிவாக ஒன்றுக்கு மேற்பட்ட நாட்கள் எரியக்கூடியதான இராட்சத தசாங்கம் ஒன்றை உற்பத்தி செய்து சந்நிதியானுக்கு வழங்குகின்ற அற்புத அனுபவத்தையும் திரு. துரைராஜா அவர்கள் எதிர் நோக்க வேண்டி ஏற்பட்டது

சந்நிதியில் கூடுகின்ற அடியார்கள் பலவகைப்பட்டவர்கள் ஆனாலும் முழு நம்பிக்கையுடன் உண்மையாகவும், தூய்மையாகவும் அடியார்கள் வழிபடும் பொழுது அவர்களது வழிபாட்டு முறைக்கும் பக்தி உணர்விற்கும் ஏற்ப சந்நிதியானும் தனது அருள் வெள்ளத்தை அவர்கள் மேல் சொரிந்து அவர்களை ஆனந்தக்கடலில் மிதக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கின்றான். அது மட்டுமல்ல இந்த உண்மையான பக்தர்கள் விடுகின்ற தவறுகளையும் தக்க முறையில் சுட்டிக்காட்டியோ அல்லது படிப்பினையை வழங்கியோ அவர்களைத் தொடர்ந்தும் தனது அடியவர்களாகவே அமைத்து வைக்கின்ற அற்புதங்களையும் சந்நிதியான் நிகழ்த்தி வருகின்றான்.

திரு. ஆறுமுகராசா அவர்களுக்கு ஏற்பட்ட மேற்படி அனுபவம் இதனை எம் எல்லோருக்கும் எடுத்துக் காட்டுகின்றதல்லவா?

ஓம் முருகா!

## எந்த ஆசை நிறைவேறும்

மனப்பூர்வமாகக் கொள்ளும் புனிதமான ஆசை எதுவும் நிறைவேறி விடுகிறது. இந்த விதி உண்மையானது என்பதை என்சொந்த அனுபவத்தில் நான் அடிக்கடி கண்டிருக்கின்றேன். ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே என் உள்ளத்தில் ஆரம்பத்திலிருந்தே ஏற்பட்ட ஆசை அந்த ஆசை எப்பொழுதும் என்னை ஏழைகளின் நடுவில் கொண்டு போய்ச்சேர்த்தது. அதனால் அவர்களில் ஒருவனாக என்னை ஆக்கிக்கொள்ளவும் முடிந்தது.

மகாத்மா காந்தி

சிந்தனைக்கு ........

நாம் ஒருவருக்கு உதவுவது விளம்பரத்துக்காகவோ, அல்லது மற்றவர் நம்மைப் புகழ்ந்து பேசுவதற்காகவோ இருக்கக் கூடாது. அது தருமமும் இல்லை. நமது ஆத்ம திருப்திக்காக செய்ய வேண்டும். பாவத்தை எப்படிப் பரம ரகசியமாகச் செய்கிறோமோ அது போலத்தான் நல்லதையும் செய்ய வேண்டும்.

மனத்தை உள்ளிறுத்து நிறுத்தல் அடக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலங் காக்கும் நல்ல தமிழ்க் கடவுள்

— திருமதி மனோகரி ஜெகதீஸ்வரன் —

இயற்கை மணமும், மாறா இளமையும், எல்லாப் பொருட்களையும் கடந்தொளிரும் தன்மையும், அழியா அழகும், உடையவனே முருகன். முருகன் தமிழன், தமிழ்க் கடவுள். சிவந்த ஆடை தரித்த, செஞ்சுடர் மேனியனாகிய முருகன் சிவபெருமானின் புதல்வனாகியும், திருமாலின் மருமகனாகியும், உமையின் புதல்வனாகியும், இலக்குமியின் மருமகனாகியும் வள்ளியின் கணவனாகியும், 'கதரகமத்தெய்யோ' வாகியும் ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குபவன்.

செயற்கரிய தவங்களைச் செய்து, பெறுதற்கரிய வரங்களைப் பெற்றுக் காலப்போக்கில் ஆணவத்தின் காரணமாகத் தன்னிலை மறந்து, மறச்செயல்கள் பலவற்றைச் செய்து வந்த சூரபத்மனால் சிறையிலடைக்கப்பட்ட தேவரைக் காத்தற்காகச், சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து, தீப்பிழம்பாகத் தோன்றிக் காற்றிலே கலந்து சரவணப்பொய்கையிலே வீழ்ந்து, தாமரை மலரிலே திருமுருகனாக அவதரித்தவனே முருகன், தீயாகப் பிறந்து காற்றிலே கலந்து ஆகாயத்திலே மிதந்து சரவணப் பொய்கையெனும் நன்னீரிலே தவழ்ந்து நிலத்தோடு தொடர்புடைய தாமரையிலே மலர்ந்தவனாகையால், தீ, காற்று, ஆகாயம், நீர், நிலம் எனும் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உருவாகியவன். சிவனின் மறக்கருணையின் வடிவங்களுள் ஒன்றாக விளங்கும் முருகன் சிவனின்றும் வேறானவன் அல்லன் முருகன் சிவாம்சம் என்பதாலும், சக்தியின் முழுப் பலத்தையும் ஒருங்கே பெற்றவன் என்பதாலும், சிவனும், சக்தியும் சேர்ந்த முழுமையான, ஆற்றல் கொண்ட ஒரு, வடிவமாகச் சுத்தப் பிரம்ம நிலையுடைய சுப்பிரமணியக் கடவுளாக விளங்குகின்றான்.

விண்ணவரான தேவர் நலங்காக்க உருக்கொண்ட முருகன் மண்ணுலகப் பெண்ணான வள்ளியை மணந்து மக்கள் தெய்வமாகி, மண்ணவரின் குறைபோக்கி, நலங்காக்கச் செய்த அருட் செயல்களோ ஏராளம். அவற்றில் அவன் நான்முகனுக்கு இரு விலங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டிய கந்தர் அலங்காரச் செய்தியும் ஓர் ஆதாரம்.

முருகனே முத்தி கொடுக்கும் வித்தகன், என்பதால் முருகனடியவருக்கு மறுபிறப்பென்பதே இல்லை. இது யாவருமறிந்த உண்மை. ஆனால் ஏதோ ஒரு அவசரத்தில் இதைமறந்த நான்முகனாகிய பிரமா முருகனடியவரொருவருக்கு அடுத்த பிறவி இன்னதென எழுதிவிட்டான். அடியவர் இன்னமும் பிறப்பெடுக்கவில்லை. அப்படி இருக்கையில் பிறக்கும்படி எப்படிச் செய்து எழுதிய குற்றத்திற்காகவே நான்முகனுக்குக் கையிலும், காலிலும் இரு விலங்குகளைப் பூட்டி விடுகிறான் முருகன். முன்பு தனக்குச் செய்த அபராதத்திற்கு, நான்முகனுக்கு ஒற்றை விலங்கு பூட்டிய முருகன், தன்னடியவருக்குச் செய்த அபராதத்தைப் பொறுக்கமாட்டாது இருவிலங்கு பூட்டிய அந்தக் கருணைச் செயலை விளக்கும் அருணகிரிநாதரின் கந்தர் அலங்காரப் பாடல் இதோ!

பங்கேருகன் எனைப் பட்டோ
லையில் இடப் பண்டு தளை
தன் காலில் இட்டது அறிந்திலனோ!
தனி வேல் எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னெற்
கிலம்பப் புலம்பவரும்
எம் கோன் அறியின் இனி நான்
முகனுக்கு இரு விலங்கே.

ஒரு திருமுகமுமாய், பல திருமுகங்களுமாய்க் கோலங்காட்டிக், கண்ணையும் கருத்தையும் கவர்ந்து எண்ணிலா நாமங்கொண்டு, ஏற்றமுறு செயல்கள் பல செய்து, நம்மைக் காத்து நிற்கும் முருகன் தவறிழைப்பவர்களை ஒரு போதும் அழிப்பவனல்லன். அவர்தம் அறியாமை இருளை அகற்றி, அருள்வெளி காட்டி ஆனந்தப் பெருவாழ்வு வாழ வைப்பவனே. வல்வினை ஓட்டி நல்வழி காட்டிடும் முருகன் என்றென்றும் மதியாதவருக்கும், மதிப்பவருக்கும் மதி கொடுக்கும் மதியாக விளங்கி, நற்கதி காட்டுபவன். இதற்கு அறியாமையினால் தவறிழைத்த சூரபத்மனின் உயிரைப் பறிக்காது, அறிவொளி காட்டித், தமது சேவற் கொடியாகவும், மயில் வாகனமாகவும் விளங்கும் நற்பேற்றினை அளித்த செய்தி நல்லதொரு ஆதாரமாகும்.

அன்றைய நக்கீரர், குமரகுருபரர், அருணகிரிநாதர், பகழிக் கூத்தர் போன்றோரினதும், இன்றைய பாவலர்களினதும் நாவுக்கு விருந்தாகி, நயங்கனிந்த இந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றிற்கு, ஊற்றாக விளங்கி, என்றென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வளர்க்கும் தெய்வமாக விளங்கும் முருகனே, தமிழ் விரகனாகிய திருஞானசம்பந்தப் பெருமானாக, சைவத்தைதரும், தமிழையும் நலிவுறாது காக்க மண்ணுலகில் அவதரித்தார் எனக் கூறுவோர் பலர். இந்நிலைகாலை ஆதாரங்களை நம்பியாண்டார் நம்பி, அருணகிரிநாதர், ஒட்டக்கூத்தர் போன்றோரின் பாடல்களிற் கண்டு தெளியலாம்.

முருகனைக் குறிக்கும் மலைமகள் புதல்வன் என்ற தொடர், சம்பந்தப் பெருமானைக் குறித்தற்காக.

"காழி நாடன் கவுணியர் தலைவன்
மாமழ நோக்கி மலைமகள் புதல்வன்"

"பொற்பமர் தோள் நற்றமிழ் விரக
மலைமகள் புதல்வ, கலைபயில் நாவ"

என்று ஆளுடைய பிள்ளையார் மும்மணிக் கோவையின் வரும் பாடலடிகளில் நம்பியாண்டார் நம்பி பயன்படுத்தியமையைக் கொண்டும், எந்த ஆற்றையும் உண்டாக்காதவரும், எந்த நதியாலும் உண்டாக்கப் பெறாதவருமாகிய திருஞானசம்பந்தப் பெருமானை ஆளுடைய பிள்ளையார் திருக்கலம் பகத்தில் நதிதரு வரதன் எனும் முருகநாமத்தாற் சுட்டுவதைக் கொண்டும்,

"புழுகொழுகு காழிக் கவுணியரின் ஞான
புனிதனென ஏடு தமிழாலே
புனலிலெதிர் ஏற அமரர் கழுவேற
அமர் பொருத வீரகுரு நாதா"

"பாலறாத் திருவாயால் ஓதிய
ஏடுநீர்க் கெதிர் போயே வாதுசெய்
பாடல் தோற்றிரு நாலாயிரமாம்
சமண ரூடர்
பாரின் மேற் கழுமீதே ஏறிட
நீறிடாத் தமிழ் நாட்டேறிடப்
பாதுகாத்தருளாலே கூனிமிர்
இறையோனும்
ஞால மேத்திய தோர் மாதேவியும்
ஆலவாய்ப் பதிவாழ்வா மாறெனும்
ஞான பாக்கிய பாலா, வேலவா,
மயில் வீரா"

உடல் உள்ளவரைக்கும் கடல் கொள்ளாத கவலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் திருப்புகழில் அருணகிரி நாதர் பலவிடங்களில், முருகனே ஞானசம்பந்தப் பெருமானாக அவதரித்தார். எனக் கூறுவதைக் கொண்டும். ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் தரும் செய்திகளிலிருந்தும் முருகனே திருஞானசம்பந்தப் பெருமானாக மண்ணுலகில் அவதரித்தார். என்பதனை உய்த்துணரலாம்.

உலகைச் சுற்றிவந்து உலகமே தனக்குள் ஒடுக்கம் எனக் காட்டிய ஞானபண்டிதன், சுரத்திரு நாட்டு வேல் முருகன், கதிர்காமர், சுப்பிரமணியர், பாலசுப்பிரமணியர், சிவசுப்பிரமணியர் கந்தசுவாமி வேலாயுதர், முருகமூர்த்தி, முத்துக்குமாரசுவாமி, என்னும் பல்வேறு நாமங்களில் உலகெங்கும் திருப்பதிகளில், செல்வச்சந்நிதி ஆலயமும் ஒன்றாகும். சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும். செல்வச்சந்நிதி ஆலயத்திலே, வேல் வடிவில் வீற்றிருந்து, அன்னதானக் கந்தனாகி, அன்புருக்காட்டி, அருளாரத்தும் அன்னையைப் போற்றித் துதித்து, எமது அகப்புறப் பகைவர்களை அடர்த்து, மனிதப்பிறவியிற் சிறந்தவராக அதனிலும் மேலான ஆன்மநேயத்திற் சிறந்தவராக எமை ஆக்கி, மனவுறுதியைச் சிதைக்கும் சம்பவங்களாற் பாதிப்புறாது எமைக்காத்து, எம்மாற்றங்களைத் தனையெமையும் ஒன்று கூட்டி, அழிவுப் பாதையிற் செல்லாது ஆக்கப் பாதையிற் சென்று நலங்காண்போமாக!

"வேலிருக்கப் பயமேது நமக்கு"

---


சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும்

## கந்த சஷ்டி கால விசேட நிகழ்வு

# "வில்லிசை"

வழங்குபவர் : வில்லிசைக் கலைஞன்

க. சத்தியதாஸ் குழுவினர்

இடம் : சந்நிதியான் ஆச்சிரம மண்டபம்

தினமும் பிற்பகல் 3-00 மணிக்கு ஆரம்பமாகும்.


வெற்றியை ஒன்றாக்குவது அன்பின் துணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய நகர காலத்தில் முருக வழிபாடு

[தொடர்ச்சி]

விஜய நகர காலத்தில் முருக வழிபாடு மறுமலர்ச்சி அடைவதற்கான காரணிகளை வரலாற்றுப் பின்னணியில் ஆராய்ந்த நாம், முருக வழிபாட்டைப் பொறுத்த வரையிலே இக்கால கட்டத்திற் சிறந்து விளங்கிய அம்சங்கள் பற்றி நோக்குதல் பொருத்தமானது.

விஜய நகர காலத்திற் சமய, சமூக வரலாற்றிலே பெரும் பங்கு வகிப்பனவாக மடங்களும் ஆதீனங்களும் விளங்குகின்றன. இவற்றுடன் குறுநில மன்னர்களும் பிரபுக்களும் இடைக்காலப் பெருமன்னர்களும் மதவளர்ச்சிக்கான உந்து சக்திகளாயினர். இவற்றின் விளைவாகப் புலவர்கள் தமது ஆற்றல்களை எல்லாம் சமயத்துறை நோக்கிச் செலுத்துதற்குப் புதிய புதிய பிரபந்தங்கள், இலக்கிய வகைகள், தலபுராணங்கள் எல்லாம் தோன்றலாயின. இப்பின்னணிக்கு அமைய முருகபக்தி இலக்கியங்கள் பல்கிப் பெருகின எனலாம். அத்துடன் ஏற்கெனவே இருந்து வந்த புராணமரபு, தலபுராணமரபாகச், சோழர் காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் அது நாயக்கர் காலத்திலேயே பெருஞ் செல்வாக்குப் பெற்றது எனலாம். முருக தலங்கள், நக்கீரருக்குப் பின்னர் மீண்டும் இலக்கிய உலகை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

சமயம் அல்லது வழிபாட்டு நெறி என்பதிலே இலக்கியம் கலை, தத்துவம் ஆகிய மூன்று பெரும் அம்சங்களின் கலப்பினை அவதானிக்கலாம். இவ்வகையில் இலக்கியத்தின் ஊடாகவே தத்துவம் உணர்த்தப்படும் அம்சம் முருக வழிபாட்டில் இக்காலத்தளவில் முக்கிய பண்பாக முனைப்புடன் மிளிர்வதை அவதானிக்க முடியும். கலைகளின் வெளிப்பாடாகக் கோவில்கள் அமைகின்றன. அங்கே நடைபெறும் கிரியைகளில் இருந்து இசை; நடனம் போன்ற கலைகள் வரிசையிலே உள்ள நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன இவற்றிலே, முருக வழிபாட்டைப் பொறுத்தவரை இலக்கிய அம்சமும் தத்துவவெளிப்பாட்டு அம்சமுமே சிறப்பிடம் பெறுகின்றன.

முருக வழிபாட்டு நெறியில் இலக்கிய அம்சம் பற்றிப் பார்க்கையில் இக்காலப் புலவர்களாகக் கச்சியப்பசிவாச்சாரியார், அருணகிரிநாதர், குமரகுருபரர் ஆகியோர் தலைசிறந்தவர்களாகவும் முருகன் அருள் பெற்றவர்கள் ஆகவும் அமைகின்றனர். கந்தபுராணம் அருளிய கச்சியப்பருக்

நன்மை என்பது செயலிற் காணும் அன்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத் 'திகடசக்கர' என்று முருகனே அடியெடுத்துக் கொடுத்தமை என்பது இந்து ஐதிகம். வடமொழி ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியான முருகன் கதையைத் தமிழிலே கந்தபுராணம் ஆக்கியவர் இவர். சைவசித்தாந்தக் கருத்துக் களஞ்சியமாகவும் இது விளங்குகிறது. சிவனைத் தலைசிறந்த கடவுளாகக் கொண்ட சைவசித்தாந்தக் கோட்பாட்டை விளக்கும் வகையிலும் அமைந்த கந்தபுராணத்தின் பாடுபொருளாகிய கந்தன் - கௌமாரநெறி தலைமைத்துவம் அமைந்தமை இங்கு கவனிக்கத்தக்கது. சிவனும் முருகனும் வேறல்லர் என்ற கோட்பாடு இங்கு பொலிந்து விளங்குவது சிறப்பம்சம் எனலாம். முருகனது கைவேல் பற்றி வீரவாகுதேவர் போற்றுவதாகக் கச்சியப்பர் கூறும் போது,

"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்த பண்பால், எந்தைகண் நின்றும் வந்த இயற்கையால், சத்தியாம்பேர் தாங்கிடும் பனுவல் பெற்ற தன்மையால், தனிவேல்பெற்றான் கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலைதீர்த்தேம்" என்கிறார். இது நாயக்கர் கால மக்களின் எதிர் பார்ப்பாகவும் நாம் கொள்வதில் தவறில்லை.

முருக இலக்கியம் என்னும் போது நினைவில் தோன்றுபவர் அருணகிரிநாதர். இவர் கிளியாக முருகன் தோளில் இருப்பவர் என்று இன்றும் போற்றப்படுபவர். 'கிளி உருவில் முருகன் தோள்மீது அமர்ந்து மக்களுக்காகப் பரிந்து வேண்டுவதாக ஐதீகம்' 8 திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம் ஆகிய நூல்களை இயற்றி முருக இலக்கியத்தை வளம்படுத்தியவர். இவர் அநுபூதி நிலை கைகூடியவர். முருக உபாசகராகிய இவரது நாவில் முருகனே தமிழ் எழுதிப்பாட அருளியதாகவும் சொல்வது இந்து ஐதீகம். உபாசனைப் போட்டி ஒன்றிலே தேவி உபாசகனாகிய சம்பந்தாண்டான் என்பவராலே தேவியை அழைக்க முடியவில்லை. அதே வேளை முருகனை அழைத்து எல்லோருக்கும் காட்சி தரச் செய்தவர் அருணகிரியார் என்னும் போது, முருக வழிபாட்டின் அனைத்து அம்சங்களும் ஒன்று சேரும் குவிமையமாக - உச்ச எல்லையாக இந்நிகழ்வு அமைவது தெற்றெனப் புலப்படும். அதே வேளையில் திருப்புகழிலே காமக்கலையின் சிறப்பினை விதந்து போற்றி அதனால் விளைகின்ற தீமையிலிருந்து தப்புதற்காகக் கடவுள் வழிபாட்டு நெறி எழுச்சி பெறவேண்டும் என்ற உள்ளக்கிடக்கையைப் பல பாடல்களிற் கண்டு கொள்ள முடிகின்றது. இந்நிலைமைக்கமைய முருகன் காத்தற்கடவுளாகத் தோற்றுவதுடன் அக்காலச் சமுதாயப் பின்னணியில் முருகனின் சிறப்பிடத்தையும் தெளிவாக்குகின்றது எனலாம். தென்னகத்திலும் ஈழத்திலும் அமைந்துள்ள முருக தலங்கள் அனைத்தையுமே அவர் பாடியது முருக வழிபாட்டு இலக்கிய மரபின் சிறப்பம்சம் எனலாம். [தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Easy way to learn English

## Verbs followed by Prepositions

( வினைச் சொற்களுடன் இணைந்து வரும் உருபிடைச்சொற்கள் )

1) He is <u>absent from</u> school since last week.
2) Keep <u>aloof from</u> bad friends.
3) He is <u>ashamed of</u> his act.
4) Mohan is <u>addicted to</u> beverages.
5) Things are <u>available for</u> cheap prices.
6) Mohan is <u>afraid of</u> shelling.
7) Students must <u>answer to</u> all questions.
8) We <u>believe in</u> God.
9) I have no <u>business with</u> him.
10) We are <u>busy with</u> the election.
11) Ranjith is <u>cabable of</u> doing any work.
12) I don't have the <u>chance of</u> going abroad.
13) Don't be <u>careless about</u> your money.
14) What is the <u>cause for</u> your absent.
15) <u>Check on</u> your certificates before facing interview
16) We must <u>confidence in</u> our attempt.
17) I shall meet you in a <u>couple of</u> days.
18) Mala lives <u>close by</u> my house.
19) I have a good <u>collection of</u> view cards.
20) This well is <u>common to</u> all.

S. Thuraira jah

ஒழுக்கம் தவிர்த்ததும் அன்பு நஞ்சாக மாறிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

03 - 11 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அருள் உரை :- நல்லை ஆதீனமுதல்வர்
சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

---

10 - 11 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- இசைமணி திரு. சி. துரைராஜா

விடயம் :- 'இன்னிசைக் கச்சேரி'

வழங்குபவர்கள் :- பாட்டு - S. பத்மலிங்கம்
வயலின் - R. ராதாகிருஷ்ணன்
மிருதங்கம் - M. சிதம்பரநாதன்
முகர்சிங் - S. ராஜா

---

17 - 11 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு. கு. அருணகிரிநாதன் (ஆவரங்கால்)

விடயம் :- 'பக்திப் பாடல்கள்'

வழங்குபவர்கள் :- K. கிருபா, தவதாசன்
மகேந்திரம் (ஈழத்துசீர்காழி)
தபேலா - M. பிரபா
ஆர்மோனியம் - கலைவேந்தன்

---

24 - 11 - 2000 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# கார்த்திகை - 2000

வெளியீட்டுரை :- ஞானபண்டித சேவாசுரபி
திரு. Dr. சி. கதிரவேற்பிள்ளை

மதிப்புரை :- திரு. க. நடேசன் (தெணியான்)
(ஆசிரியர், தேவரையாளி பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2000 ஜனவரி - ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அது பற்றிய முடிவுகள் 2001 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

---

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மலர்க் குழு ,
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை,
செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org